குண்டூசி
ஆகஸ்ட் · எட்டு அணா
அபூர்வமான கலாசிருஷ்டி த அமோகமான ஆதரவு
ஜுபிடரின்
கன்னியின்
காதலி
ராம்நாத்·சேகர்

முயற்சி வீணாவதை தடுக்கலாம்

உங்களுக்கு தேவையான அச்சு வேலைகளை தீர ஆலோசித்துத் திட்டத்துடன் செய்தீர்களானல், குறைந்த செலவில் நிறைந்த பலனை அடையலாம்.

அழகாக அச்சடிப்பது ஒரு தனிக் கலை. அதற்கு நீண்ட நாள் அனுபவமும், பழக்கமும் அவசியம். பல வருஷங்களாக நாங்கள் நானாவித அச்சு வேலைகளைச் செய்து நல்ல அநுபவம் பெற்றுள்ளோம். நீங்கள் கண்டபடி முயற்சி செய்து நஷ்டம் அடைவதற்குப் பதில், எங்கள் அநுபவத்தைக் குறைந்த செலவில் உபயோகித்துக் கொண்டு மிகுந்த பயனடையலாம்.

போன் : 4037

தந்தி : "PRINTHOUSE"

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ்

45/46, அரண்மனைக்காரத் தெரு :: சென்னை-1.

ஆகஸ்ட் 19உ முதல்
பாஸ்கர் பிக்சர்ஸ்
நாட்டியராணி
பி. எஸ். ஸரோஜா ☆ வசுந்தரா ☆ ஜெயம்மா ☆ ராஜாமணி
பி. எஸ். ராஜா அய்யங்கார் • பாலையா • சார்லி • லலிதா, பத்மினி நடித்தது
சென்னை :
கிரௌன் டாக்கீஸிலும்
கீழ்கண்ட ஊர்களிலும்
மதுரை - ஸ்ரீதேவி
கோயமுத்தூர் - லைட் ஹவுஸ்
திருநெல்வேலி - பாலஸ்
காஞ்சிவரம் - கண்ணன்
வேலூர் - தாஜ்
ராஜபாளையம் - தனலக்ஷ்மி
சென்னையில் தினசரி 3 காட்சிகள்: 3, 6-15, 9-30
டைரக்ஷன் பி. என். ராவ்
ஸ்டுடியோ: ஜெமினி
பாட்டுகள் டி. கே. பட்டம்மாள்
நடனம் வி. மாதவன்

இப்பொழுது நடைபெறுகிறது

புதுமையிலும் புதுமையான தியேட்டரில்

சித்ரா

(மௌண்ட் ரோடு)

- போன் நெ 8125 -

பில்மிஸ்தானின்

அதிவிசேஷ இன்னிசைப் படம்!

ஆக்ட்ரஸ்

(நடிகை) ★ - ஹிந்தி -

★ அழகி ரேஹனா
★ பிரேம் அதீப்
★ மீனா

நடித்தது

★

கதை:

கே. அஹமத் அப்பாஸ்

★

தினசரி மூன்று காட்சிகள்: 3-15, 6-30, 9-30

ரூ. 2-8-0 & 1-14-0 வகுப்புகளுக்கு தினசரி காலை 10 மணியிலிருந்து அட்வான்ஸ் புக்கிங் உண்டு

ஸ்திரீகளுக்கு

கடைசி மூன்று வகுப்புகளிலும் தனி இடம் உண்டு

600 008.

உங்களுக்குத் தேவையான
எல்லாவித ஜவுளிகளுக்கும்
இன்றே

விஜயம் செய்யுங்கள்

Meerans

மீரான்ஸ்

பக்கிங்காம் கர்னுட்டிக் மில் ஜவுளிகள், மேட்டூர் மில் ஜவுளிகள், பம்பாய், அஹமதாபாத் மில் ஜவுளிகள்
இவைகளுக்கு விநியோகஸ்தர்கள்

★

மற்றும் ட்வீட்கள், உல்லன்,
வெளி நாட்டு ஜவுளிகள்
முதலிய எல்லாம் கைவசமுள்ளன

★

எஸ். மீரா சாகிப்
அண்ட் பிரதர்ஸ்

38, ஈவ்னிங் பஸார் ரோடு,
சென்னை.

தலைமை ஆபீஸ்:
19, கிடங்குத் தெரு, சென்னை-1.

பட்டை 2. ஊசி 11.
ஆகஸ்ட் 1949

இந்த ஊசியில்

விதிவிலக்கு அவசியம்	தலையங்கம்	5
மிருணாளினியின் அரிய சேவை	விசேஷச் செய்தி	6
மாதுரி தேவி	வாழ்க்கை வர்ணனை	10
மாதுரி தேவி	வர்ணப் படம்	17
பி. எஸ். சரோஜா	ஆர்ட் படம்	18
பணமும், புகழும்	சிறு கதை	19
குண்டூசியைக் கேளுங்கள்	பதில்கள்	22
செய்திப் படங்கள்	படங்கள்	31
போதுஜனம் பேசுகிறுர்	கடிதங்கள்	39
பிரம்மலோகம்	ஸ்டுடியோச் செய்திகள்	43
புஸ்தகப் பொழுது	புஸ்தக விமர்சனம்	45
துனிப்புல்	'வெட்டுகளி'	47
கே. மாலதி	ஆர்ட் படம்	51
ஸ்ரீ ராமன்	வர்ணப் படம்	52
மருத நாட்டு இளவரசி	திரைக் கதை	56
இது செய்தி	படச் செய்திகள்	66
குண்டூசி டைரி	தினக் குறிப்பு	68

குண்டூசி காரியாலயம் :
25, கிடங்குத் தெரு, சென்னை-1.

டெலிபோன் : 4316.

வருஷ சந்தா : இந்தியா, இலங்கை-ரூ. 6.
பர்மா, முதலிய வெளி நாடுகள்-ரூ. 9.
தனிப் பிரதி : இந்தியா—அணு. 8.
இலங்கை-சதம் 50 வெளிநாடு-அ. 12

ரூபாய் 500 இனாம் !

உமா கோல்ட் கவரிங் வொர்க்ஸ், (G) உமா மஹால், மசூலிப்பட்டணம்

உமா கோல்டு கவரிங் போஸ்டாபீஸ்

ஓர் உயர்ந்த உலோகத்தின் மேல் அசல் தங்கத் தகட்டினால் சுற்றப்பெற்று வெல்டிங் செய்தது. அப்படி இல்லை என்று நிரூபிப்பவர்களுக்கு 500 ரூபாய் இனாம். நாங்கள் தயார் செய்யும் தங்க கவரிங் நகைகளின் மேல் UMA என்ற எழுத்துக்களைப் பார்த்து வாங்குங்கள், பொன் நிறம். 10 வருஷம் உத்திரவாதம்.

பரீக்ஷை செய்ய வேணும் என்பவர் உமா ஆபரணங்களை நைட்ரிக் ஆஸிட் என்கிற திராவகத்தில் போடவும். போட்டு 5 நிமிஷத்திற்குள் கவரிங் செய்த பொன் வரும். இப்படி பரீக்ஷை செய்தவர் அநேகம் பேர்கள் எங்களுக்கு சர்டிபிகேட் கொடுத்தார்கள். 800 டிசைன் கொண்ட கேட்லாக் இனாம். உள்நாடுகளை விட இதர தேசங்களுக்குக் கேட்லாக் விலையைவிட 25% அதிகம்.

N. B:—ஆபரணங்கள் வி. பி. சார்ஜ் 0-15-0 அணா மாத்திரம்.

Tel : " UMA ". Masulipatam.

பட்டை 2

ஊசி 11

குண்டூசி

ஆசிரியர் பி.ஆர்.எஸ்.கோபால்

ஆகஸ்ட்

1949

விதிவிலக்கு அவசியம்

சென்ற மூன்று மாத காலமாய் படத் தொழிலில் யுத்த காலத்தில் இருந்தது போன்ற சுறுசுறுப்பு இருந்து வருகிறது. நடிகர்கள் சென்னைக்கும், சேலத்திற்கும், கோயமுத்தூருக்கும் அலைந்து கொண்டிருக்கின்றனர். ஸ்டுடியோக்களிலோ இராப்பகலாய் வேலை. பட முதலாளிகளிடமோ அசாதாரணமான சுறுசுறுப்பு இத்தனையும் படத் தொழிலில் நெருக்கடி தீர்ந்து பழையபடி சுபீக்ஷம் ஏற்பட்டு விட்டது என்பதனால் அல்ல. ஓரளவு தயாரான படங்களுக்கு சர்க்கார் நீளக்கட்டுப் பாடு சம்பந்தமாக அளித்திருக்கும் சலுகை ஆகஸ்ட் 31ந் தேதியோடு தீர்ந்து போகிறது என்பதுதான் இதற்குக் காரணம்.

சர்க்கார் இந்த சலுகையை சில மாதங்களுக்கு முன் வெளியிட்டதிலிருந்து, (படங்களைத் தயாரித்துக் கொண்டிருந்த) பட முதலாளிகளில் பெரும்பாலோரும் தத்தம் படங்களை ஆகஸ்ட் 31-ந் தேதிக்குள் முடித்து, மேற்படி சலுகையைப் பெறுவதற்கு பகிரதப் பிரயத்தனப் பட்டு வருகிறார்கள். ஆனால் தற்போது பார்த்தால் சில படங்கள்தான் இந்த சலுகையைப் பெறக் கூடும் என்று தெரிகிறது. எவ்வளவோ முயற்சித்தும் சில முதலாளிகள் தங்கள் படங்களை இந்தத் தேதிக்குள் முடிக்க முடியாத நிலையிலிருக்கிறார்கள். இதற்குக் காரணம், அவர்களது அசிரத்தை என்றே, பண வசதிக் குறைவு என்றே சொல்லிவிட முடியாது, அவர்களால் முடிந்த வரை முயற்சித்திருக்கிறார்கள். ஆனால் ஒரே பிரபல நக்ஷத்திரம் ஏக காலத்தில் பல படங்களில் நடிக்க வேண்டியிருந்ததாலும், ஸ்டுடியோக்காரர்கள் அநேகருக்கு 'ஸெட்' போட்டுத் தர வேண்டியிருந்ததாலும் தான் அநேக படங்கள் இன்னும் கூட முடிக்கப் பெறாமலிருக்கின்றன. முயற்சிக்குப் பிறகு, பண வசதியின்மையால் படத்தை முடிக்காமலிருக்கும் பட முதலாளிகள் சொற்பப் பேர்கள் தானிருப்பர்.

இவைகளிலிருந்து ஒன்று தெளிவாகும். எவ்வளவுதான் முயன்றாலும் சர்க்காரின் நிர்ணய காலத்திற்குள் ஒரு சில படங்களே தயாராக முடியும் என்பது. ஆதலால் நீளக் கட்டுப்பாட்டுச் சலுகைக்கு சர்க்கார் நிர்ணயித்துள்ள கால வரையறை போதாது என்பது நிதர்சனமாய்த் தெரிகிறது.

யுத்த காலத்தில் சர்க்கார் அடிக்கட்டுப் பாடு செய்த போது கால நிர்ணயம் செய்ய வில்லை. படத்தை ஆரம்பித்திருந்தவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு அளித்து விட்டனர். அந்த உத்தரவு புத்திசாலித்தனமாயிருந்தது. அதே கொள்கைப் படி சர்க்கார் இப்பொழுது கால நிர்ணயத்தை ரத்து செய்து விட்டு, படங்கள் வாரியாக பரிசீலனை செய்து, தகுதி உள்ள பட முதலாளிகளுக்கெல்லாம் சலுகை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

"குண்டூசி"க்கு சுதந்திர தின வாழ்த்துக்களை அனுப்பியிருக்கும் எல்லா அன்பர்களுக்கும் எம் மனமார்ந்த வந்தனத்தை இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கந்தர்வ வித்யாலயத்தினர் மிருணாளினிக்கு அளித்த வரவேற்பு வைபவத்தில் கனம பிரதம மந்திரி குமாரசாமி ராஜா பேசுகிறார்.

படத்தில் மிருணாளினியையும், அவர் பக்கத்தில் பாரதியையும் காணலாம்.

மிருணாளினியின் அரிய சேவை

இந்திய அரசியல் நிர்ணய சபை அங்கத்தினரான, சென்னையைச் சேர்ந்த, ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதனின் இரண்டாவது புத்ரியும், நேதாஜியின் ஜான்ஸி ராணி படைத்தலைவி கேப்டன் லக்ஷ்மியின் சகோதரியுமான ஸ்ரீமதி மிருணாளினி சாராபாய் சுமார் ஆறு மாதகாலம் ஐரோப்பாவில் தம் நடன கோஷ்டியுடன் சுற்றுப் பிரயாணம் செய்து, பல முக்கிய நகரங்களில் சுமார் 80 கச்சேரிகள் மூலம் மேனாட்டினருக்கு நடன விருந்தளித்துவிட்டு, அங்குள்ளோரது அபாரமான பாராட்டுதல்களைச் சுமந்துகொண்டு இந்தியா திரும்பியிருக்கிறார். அவர்களது சுற்றுப் பிரயாணச் செய்திகளை இந்தியப் பத்திரிகைகள், "ஏதோ போயிருக்கிறார்; அவர் மேற்கொண்டுள்ளது நல்ல காரியந்தான்" என்ற ரீதியில் மட்டும்தான் வெளியிட்டிருந்தன. அவரது போட்டோக்களை வெளியிட்டு பல மேனாட்டுப் பத்திரிகைகள் வானளாவப் புகழ்ந்துள்ளதைப் பார்த்தபின், அவரது சுற்றுப் பிரயாண அனுபவங்களைக் கேட்டபின், இந்தியப் பத்திரிகைகள் அவரது கலா சேவையைச் சரியான அளவு புகழத் தவறிவிட்டன என்றே தோன்றுகிறது.

மிருணாளினி இம்மாதம் 12-ம் தேதி சென்னைக்கு விஜயம் செய்த போது, சென்னைப் பத்திரிகாசிரியர்களுக்கு ஒரு சிற்றுண்டி விருந்தளித்து, அவர்களை அறிமுகம் செய்துகொண்டார்.

ஐரோப்பியர்கள் இந்திய நடனங்களில்—முக்கியமாக பரதம், கதகளி இவைகளில்—மிகுந்த சிரத்தை காட்டுகிறார்கள் என்றும், பல்வேறு நாட்டியங்களின் தாரதம்மியங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து ரஸிக்கும் தன்மை அவர்களிடம் அதிகம் இருக்கிறதென்றும், பரத நாட்டியக் கலையின் நுட்பங்களை ஆண்களை விட பெண்களே நன்கு விளக்கிக் காட்ட முடியும் என அவர்கள் அபிப்பிராயம் கொள்ளுவதாயும் மிருணாளினி கூறுகிறார். அவரது நாட்டிய சேவையையும், திறமையையும் பாராட்டி பாரிஸ் நகரிலுள்ள பிரஞ்சு தேசிய புத்தகாலயத்தினர் அவருக்கு ஒரு பதக்கத்தை வழங்கியிருக்கிறார்கள்.

மேனாட்டிலுள்ள முக்கிய பத்திரிகைகளெல்லாம், மிருணாளினியின் நடனத்தில் கலை அம்சம் ததும்புவதாயும், பரதநாட்டியத்திலோ இந்தியக் கலாச்சாரம் பூரணமாக பொதிந்துள்ளதாகவும், மிருணாளினி தம் சுற்றுப் பிரயாணத்தின் மூலம் இந்தியாவுக்கும் இந்தியக் கலைகளுக்கும் பெரிய சேவை புரிந்துள்ளதாகவும் அப்பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. அவர்களுக்கு துளியும் பரிச்சயம் இல்லாத பரத நாட்டியத்தின் நுட்பங்களை அவர்கள் அறிந்து, அனுபவித்து விமர்சனம் செய்துள்ளது ஆச்சரியத்தை அளிக்கிறது. இதையெல்லாம் பார்த்த பின் நம் இந்தியப் பத்திரிகைகள் இப்புராதனக் கலைக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லிவிடத் தோன்றுகிறது.

பத்திரிகைகளைப் பற்றி மிருணாளினி

வலதுபுறம்

1. மிருணாளினியும், அவரது கணவர் டாக்டர் விக்ரம் ஏ. சாராபாயும்.

*

2. மிருணாளினியின் ஒரு நடனத் தோற்றம்.

*

3. பண்டித ஜவஹர்லாலும், மிருணாளினியும்.



பின் வருமாறு கூறினார்: "மேனாட்டுப் பிரபல பத்திரிகாலயங்களில் நாட்டியக் கலை விமர்சனம் எழுதுவதற்கென்றே தனியாக அக்கலையில் நன்கு தேர்ந்த விமர்சகர்களை வைத்திருக்கிறார்கள். அங்கு நாட்டியக் கலைக்கு நல்ல ஆதரவு கிடைத்துவருகிறது. நடனக் கலைஞர்களுக்கோ நல்ல உத்சாகம் அளிக்கப் படுகிறது. இங்குள்ள பத்திரிகைகளோ அதற்கு மாறாக 'ஏனோதானோ' என்ற முறையில் எழுதி வருவதைப் பார்க்க வருத்தமே ஏற்படுகிறது. நம் இந்தியப் பத்திரிகைகள் ஒவ்வொன்றிலும் நாட்டியப்பகுதி அவசியம் இடம்பெற வேண்டும் என்பது என் கோரிக்கை.

பாரதியாரின் உயிர்க் காவியங்களான "விடுதலை", "தீராத விளையாட்டுப் பிள்ளை", "சின்னஞ்சிறு கிளியே" ஆகியவற்றை மிருணாளினி கோஷ்டியினர் அபினயத்துடன் ஆடியதைத்தான் மேனாட்டவர்கள் அதிகமாக ரஸித்தார்களாம்.

மிருணாளினி சென்னை தியாகராயநகர் கந்தர்வ வித்யாலயத்தில் நடனப்பயிற்சி பெற்றவர். அவர் இந்த வித்யாலயத்தைச் சேர்ந்த பாரதி, தங்கம்மா, சங்கரி, வனஜா, சிவசங்கர், பணிக்கர் ஆகியோரை தம்முடன் கோஷ்டி சேர்த்துக் கொண்டு, மேனாடுகளுக்குச் சென்று திரும்பியிருக்கிறார். இவர்களைப் பாராட்டுவதற்காக இம்மாதம் 13ந் தேதியன்று கந்தர்வ வித்யாலயத்தினர் சென்னை மியூஸியம் தியேட்டரில் விமரிசையான ஒரு வரவேற்பு வைபவத்தை ஏற்பாடு செய்தார்கள். இவ்வைபவத்திற்கு கனம் பிரதம மந்திரி குமாரசாமி ராஜா தலைமை வகித்தார். அவர் பேசுகையில், தம் சுற்றுப்பிரயாணத்தின் மூலம் மிருணாளினி மேனாட்டினருக்கு நம் நாட்டியக் கலையின் மேன்மையை பிரசாரம் செய்துவிட்டு வந்திருப்பதற்காகத் தாம் மிகப் பெருமை கொள்ளுவதாகக் கூறினார். வித்யாலயத்தின் சார்பாக மிருணாளினிக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப் பட்டது.

பரத நாட்டியக் கலையை கௌரவமிக்க கலையாகச் செய்ய வேண்டுமென சென்ற பதினைந்து வருஷங்களாகப் பாடுபட்டு வரும் ஸ்ரீ. ஈ. கிருஷ்ணய்யர் உள்ளம் பூரித்துப் போனார். முன்பெல்லாம் போலல்லாது, கலைஞர்களையும் நம்மவர்கள் கௌர

விக்கத் தொடங்கி யிருப்பதற்காக தாம் பெருமகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்தார். பின்னர், புரொபஸர் சாம்பமூர்த்தி, திவான் பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி முதலானோரும் மிருணளினி யின் சேவையைப் பாராட்டினார்கள்.

கலையில் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள் நிறைய உள்ளனர். ஆனால் அவர்களிடம் அழகாக பிரசங்கம் செய்யும் திறமையையும் காண்பதரிது. இதற்கு பட்டதாரியான மிருணளினி ஒரு விதிவிலக்கு. மேற்படி வைபவத்தின் முடிவில் அவர் தம் பிரயாண அனுபவங்களைப் பற்றி சுச்சிரமமாகவும், அழகாகவும் ஆங்கிலத்தில் ஒரு சிறு பிரசங்கம் செய்தார். மேனாடுகளில் சங்கீதம், நடனம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கு சர்க்கார் நல்ல ஆதரவு அளித்து வருவதாகவும், அது போல நம் சர்க்காரும் இக்கலைகளுக்கு மிகுந்த ஆதரவு காட்ட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

முன்பே சில வட இந்தியக் கலைஞர்கள் மேனாடுகளுக்குச் சென்று தம் நடனங்களை ஆடிக்காட்டியிருக்கின்றனர். ஆனால் மிருணளினி கோஷ்டியில் தான் பரதநாட்டியம் முதல் தடவையாக பிரதம ஸ்தானம் வகித்திருக்கிறது. அதற்கேற்க மேனாட்டவரின் பெரும் பாராட்டுதலையும் அது பெற்றிருக்கிறது. ஆகவே மிருணளினியைப் பாராட்ட தென்னிந்தியா அதிகமாய் கடமைப்பட்டிருக்கிறது.

—"ராதா"

வி. என். ஜானகியின் புகார்

தன்னுடைய தாய் மாமன் எம். நாராயணனும், ஒரு ஸ்டுடியோவில் வேலை பார்க்கும் ராமமூர்த்தி என்பவரும், தமக்குச் சொந்தமான சொத்துக்களில் சுமார் ரூ. 36,000 பெறுமானமுள்ளவைகளை மோசடி செய்து விட்டதாக சினிமா நடிகை வி. என். ஜானகி போலீஸில் புகார் கொடுத்திருக்கிறார்.

கடந்த நான்கு வருஷங்களாகத் தன்னுடன் இருந்த ஸ்ரீ. நாராயணனே தம்முடைய சொத்துக்களை நிர்வகித்து வந்தா ரென்றும், தம்முடைய விவாக விஷயமாக ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாகவே இவ்விதம் மோசடி செய்து விட்டதாக வும் அவர் தமது புகாரில் குறிப்பிட்டிருக்கிறார்.

கணவர்மீது நடிகை வழக்கு

தம்முடைய, மைனரான பெண் வைஜயந்தி மாலாவையும் அவளுடைய சொத்துக்களையும் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென பிரபல சினிமா நடிகை வசுந்தரா தேவி, தம் கணவர் எம். டி. ராமன், தம் தாயார் யதுகிரியம்மாள் இருவர்மீதும் ஒரு பிராது கொடுத்திருக்கிறார். வசுந்தரா தேவி தம் பிராதில், இந்த வருஷம் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் தம் கணவரும், தம் தாயும் தமது மகளைக் கடத்திச் சென்று தனியே வசித்து வருவதாகவும், தம் மகள் நாட்டியக் கச்சேரிகள் மூலம் சம்பாதிக்கும் வருமானத்தைச் செலவு செய்வதாகவும், குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய கணவர், தாமே மகளின் சரியான 'கார்டியன்' என்றும், அவளின் வருமானம் எல்லாம் அவள் நாட்டியக் கலையில் முன்னேற்றம் அடையவே செலவிடப்படுவதாகவும் கூறி யிருக்கிறார்.

இம் மாதம் 12-ம் தேதி இந்த வழக்கு நீதிபதி ராஜகோபாலனிடம் வந்தது. அவர், வழக்கு முடிவடையும் வரை ஒவ்வொரு மாதமும் 5-ம் தேதிக்குள் வைஜயந்தி மாலாவின் நகைகளின் ஜாப்தாவையும், அவளுடைய வரவு செலவு கணக்கையும் கோர்ட்டில் தாக்கல் செய்ய வேண்டுமென்று ஒரு இடைக்கால உத்திரவைப் பிறப்பித்திருக்கிறார்.

சேம்பரின் யோசனை

டூரிங் சினிமா, நிரந்தர தியேட்டர் இவைகளிடையே நீண்ட காலமாக லைசென்ஸ் வழங்கப்படும் விஷயமாக தகராறு இருந்து வருகிறது அதன் நிர்வாகிகள் பலரை அழைத்து, சென்ற மாத இறுதியில் தென்னிந்திய பிலிம் சேம்பர் ஒரு கூட்டம் நடத்திற்று. அவர்கள் இருவருக்கும் மத்யஸ்தம் செய்து,! சில அரிய யோசனைகளை சேம்பர் தெரிவித்திருக்கிறது.

போன்: 84412. தந்தி: VEGOILS

டி. கண்ணு & கம்பெனி

(தமிழ் நாடு, ஆந்திர தேசம் மற்றும் ராயலசீமாவிற்கு பிரதான வினியோகஸ்தர்கள்)

கலீலி மான்ஷன்ஸ், 35, மவுண்ட் ரோடு, மதராஸ்

மகிழ்ச்சியுடன் அறிவிப்பது

மாதுரி

பிராண்டு

ஜலவாயு ஏற்பட்ட கடலை எண்ணெய்

(வனஸ்பதி)

மற்றும்

ஸ்வாத்—சுத்தம் செய்யப்பட்ட எண்ணெய்

எல்லா வியாபாரிகளிடமும் பெரிய அளவு பாக்கிங்களில் கிடைக்கும்.

வர்த்தக விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.

ஆகஸ்டு 15உ

ஒவ்வொரு இந்தியருக்கும் மிக முக்கியத்வம் வாய்ந்த தினமாகும் இன்றுடன் சுதந்திரம் பெற்று 2 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. சுதந்திர இந்தியாவுக்கு இன்னும் புத்துயிர் அளித்தாக வேண்டியிருக்கிறது. சர்க்காரால் மேற்கொள்ளப் பட்டுள்ள பல வேறு தேச நிர்மாணத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க ஏராளமான மூலதனம் தேவையாக இருக்கிறது. உங்களுடைய சிறு சேமிப்புகள் இந்த மூலதனத்தை அளிக்கிறது. ஒவ்வொரு இந்தியரும் மாதம் ஒன்றுக்கு 3½ அணு சேமித்தால், தேசிய புனர் நிர்மாண காரியங்களுக்கு இந்தியாவுக்கு வருஷத்தில் *100* கோடி கிடைக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கும் உதவிக் கொண்டு, உங்கள் தேசத்திற்கும் உதவி செய்யுங்கள்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸர்டிபிகேட்டுகளில்

முதலீடு செய்யுங்கள்

முறையே 3% 3½% 4-1/6% வட்டி அளிக்கக்கூடிய *5* வருஷங்கள், *7* வருஷங்கள், *12* வருஷங்கள் ரகங்களில் இவை கிடைக்கின்றன. வட்டி வருமான வரி இல்லாதது. நீங்கள் ரூ. *25,000/-* வரை முதலீடு செய்யலாம்.

எல்லா தபாலாபீஸ்களிலும் வாங்கிக் கொள்ளலாம்

மேலும் விவரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

மாகாண தேசிய சேமிப்பு அதிகாரி, சென்னை-6.

மாதுரி தேவி

குண்டூசி

வாழ்க்கை வர்ணனை

பெண்ணைப் பிறந்த ஒருவருக்கு சமையல் செய்வதற்குத் தெரியாது என்று வைத்துக்கொள்ளுங்கள்; அவரைப் பற்றி உங்களுக்கு என்ன தோன்றும்? "இந்த அம்மாள் அடுத்த ஜன்மத்தில் ஆண் பிள்ளையாகப் பிறக்க வேண்டும்" என்று "சபிக்க" நினைப்பீர்கள் அல்லவா? ஆனல் உங்கள் சாபம் பலிதமடைவதற்கு நீங்கள்தான் முனிவர்களல்லவே! அதற்குப் பதில், "இந்த அம்மாள் சினிமாப் படங்களிலாவது ஆண் வேஷங்களில் நடிக்க வேண்டும்" என்று "ஆசீர்வதித்தீர்களானல" அது ஒரு வேளை பலித்தாலும் பலிக்கக் கூடும். இப்படி யாராவது ஆசீர்வதித்ததின் விளைவாகவோ என்னவோ, சமையல் செய்யத் துளியும் அறியாத பிரபல நக்ஷத்திரம் மாதுரி தேவிக்கு சினிமாப் படங்களில் அடிக்கடி ஆண் வேஷங்கள் அளிக்கப் பட்டு வருகின்றன. அவரும் ஆண் வேஷங்களை நடிப்பதில் மிகுந்த அநுபவம் பெற்று வருகிறார். முதலில்,

ங்களை அளித்து, மிக "தர்ம சங்கடமான நிலைமை"யையும் ஏற்படுத்தி யிருக்கின்றனர்!

"உங்களுக்கு சமையல் வேலை தெரியாததற்குத் தண்டனையாகத் தான் இப்படி ஆண் வேஷங்களாக அளிக்கப்படுகின்றன" என்று நா தமாஷாய் மாதுரியிடம் கூறினேன். பீறிக் கொண்டு வந்த சிரிப்பை அவர் அடக்கிக் கொண்டு, "அப்படியானல் நான் எப்படியாவது சமையல் செய்யக் கற்றுக்கொண்டு விடுகிறேன். எனக்கென்னவோ ஆண் வேஷங்களில் நடிப்பது பிடிக்கவில்லை" என்று கூறினா.

"தாராளமாய் .கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் கணவர் இன்ஷியூர் செய்து

அவர் மாடர்ன் தியேட்டர்ஸாரின் ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி படத்தில் ஆண் வேஷத்தில் நடித்தார். அவர் மீது ஐந்து பெண் மணிகள் மோஹம் கொள்ளும் படியும் செய்து வைத்தனா! ஜுபிடர் பிக்சர்ஸாரோ அவருக்கு கன்னியின் காதலியில் இரண்டு ஆண் வேஷ

கொண்டிருக்கிறாரல்லவா?'' என்று சிரித்தபடி கேட்டேன். அருகிலிருந்த மாதுரியின் கணவர் சிரிப்புத் தாங்காமல் ''படீர்!'' என்று சிரித்து விட்டார்!

எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு, மாதுரிதேவி தாம் தீர்மானித்தபடி சிக்கிரமே சமையல் வேலையைக் கற்றுக் கொண்டு விடுவார் என்று. தம் பெற்றோர்களின் பிடிவாதமான எதிர்ப்பையும், வேறு பல கஷ்டங்களையும் சாமாளித்துக் கொண்டு, தம் விருப்பப் படியே ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகியிருக்கும் அவருக்கு, மனம் வைத்தால், இதுதானா பிரமாதமான காரியம்?

மாதுரி தேவி சினிமாவில் சேர்ந்தது ஒரு எதிர்பாராத சம்பவமாகும். அவர் மனதில், 'சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டும்' என்ற விதையை ஊன்றியவர் **சந்திர காந்தா** படத்தில் நடித்திருக்கும் கோசலம் ஆவார். வித்தூன்றியதோடு நில்லாமல், அந்த 'வித்து,' முளைத்து, மலர்ந்து, காய்த்து, பழமாகும்படிச் செய்து வைத்தவரும் அவர்தான்.

''சுமார் 11 வருஷங்களுக்கு முன் ஒருநாள் சாயங்காலம் மாதுரி தம் பெற்றோர்களுடன் கடற்கரைக்குச் சென்றிருந்தார். பெற்றோர்கள் ஒரு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு பேச்சை ஆரம்பித்தனர். சிறுமி மாதுரியோ தம்முடன் வந்த சில பெண்

ளைச் சேர்த்துக் கொண்டு விளையாட ஆரம்பித்தார். அதற்கு சில கஜ தூரத்தில் தான் நடிகர் கோசலம உட்கார்ந்திருந்தார்.

மாதுரி பால்யத்திலேயே மிகுந்த குறும்புத்தனமும், 'வெடுக் வெடுக்' கென்று பேசும் வழக்கமும் கொண்டிருந்தார். அவருடைய குறும்புத்தனங்களையும், துறுதுறுப்பையும், பேச்சையும், முக அழகையும் கவனித்தபடி உட்கார்ந்திருந்த கோசலத்திற்கு, "இந்தப் பெண் சினிமாவில் நடித்தால் நன்றாயிருக்குமே" என்ற எண்ணம் திடீரென்று ஏற்பட்டதாம். அந்த எண்ணம் அவரை விட்டகல மறுத்ததால், அவர் மாதுரியை அருகில் அழைத்து, "ஏனம்மா, உனக்கு சினிமாவில் நடிக்க இஷ்டமா?" என்று கேட்டார்.

இதைக் கேட்ட மாதுரி ஆச்சரியத்துடன், "நானா! மனிதர்கள் எப்படி சினிமாவில் நடிப்பது? அட்டைப் படங்களை வைத்துக்கொண்டு

தானே சினிமாப் படம் பிடிக்கிறார்களாம்?'' என்று கேட்டார்.

கோசலம் உரக்கச் சிரித்து விட்டார். மாதுரியோ திகைத்துப் போனார். ஒரு நிமிஷத்திற்குப் பிறகு கோசலம் சிரிப்பை அடக்கிக் கொண்டு கூறினார்: ''சினிமாவில் நீ பார்ப்பவை அட்டைப் படங்களல்ல. அசல் மனிதர்கள்தான் அப்படியெல்லாம் நடிக்கிறார்கள். நான்கூட ஒரு சினிமா நடிகன்தான் தெரியுமோ?'' என்றார்.

மாதுரி ஆச்சரியத்தில் மூழ்கிப் போனார். அவரால் முதலில் நம்பவே முடியவில்லை. சினிமாப் படங்கள் எவ்விதம் தயாரிக்கப் படுகின்றன என்பதை கோசலம் விளக்கியபின்பே அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ''அப்படியானால் நான்கூட சினிமாவில் நடிக்கலாம் என்கிறீர்களா?'' என்று மாதுரி ஆவலோடு கேட்டார்.

''ஏன், முடியாது? இஷ்டமானால் சொல்லு. நானே உன்னைச் சேர்த்து வைக்கிறேன்'' என்று பதில் அளித்தார் கோசலம்.

கோசலத்திடம் மாதுரி தம்முடைய முடிவை தெரிவிப்பதற்குப் பதில் தடாலென்று எழுந்திருந்து தம் பெற்றோர்கள் இருந்த இடத்திற்கு ஓடினார். சில நிமிஷங்களுக்குப் பிறகு, மாதுரி திரும்பி வந்து, ''அங்கே வாருங்கள். அப்பா உங்களைப் பார்க்க வேண்டுமாம்'' என்று கோசலத்தை அழைத்தார். கோசலம் மாதுரியின் பெற்றோர்கள் இருந்த இடத்திற்குச் சென்றார். சினிமாவைப் பற்றி அவர்களுக்குள் பேச்சுஆரம்பமாகியது. சினிமாவில் சேர்ந்து நடிக்க வேண்டும் என்று மாதுரி பிடிவாதமாய்க் கூறினார்.

கோசலம் இதை ப... மாக ஆதரித்தார். அவ...

விட பலமாக மாதுரியின் பெற்றோர்கள் இந்த யோசனையை எதிர்த்தனர். கடைசியாக, கோசலம் "மாதுரி சிறு பெண்தானே, சினிமாவில் தமாஷாக நடித்தால் என்ன? பிறகு வேண்டுமானால் நடிப்பதை நிறுத்தி விட்டால் போகிறது" என வாதித்தார். "ஆமாம், அப்பா. ஒரே ஒரு படத்தில் நடித்து விட்டு நிறுத்தி விடுகிறேன்" என்று ஒத்துப் பாடினார் மாதுரி. பெற்றோர்களின் மனம் சிறிது இளகியது; அரை மனதுடன் சம்மதித்தனர்.

ஒருவரை சினிமாவில் நடிக்கத் தூண்டி விட்டு சும்மா இருப்பது நியாயமல்லவே? ஆதலால் மாதுரியை சினிமாவில் சேர்த்துவிடும் பொறுப்பையும் கோசலமே ஏற்றுக் கொண்டார். தீவிர முயற்சியின் பேரில், **குமார குலோத்துங்கன், சியாம சுந்தர்** ஆகிய படங்களில் மாதுரி நடிப்பதற்கு அவர் ஏற்பாடு செய்தார். ஆனால், கடைசி நேரத்தில் ஏதோ இடையூறால் அம் முயற்சி பலிக்காமற் போய்விட்டது. கடைசியில் **பாண்டுரங்கா** தமிழ்ப் படத்தில் மாதுரிக்கு இந்திராணியின் வேஷத்தை வாங்கித் தந்தார் கோசலம். அதோடு அவருக்கு நடிக்கவும் அவரே கற்றுக் கொடுத்தார். அப் படம் 1939ம் வருஷத்தில் வெளி வந்தது. முதல் படமாயிருந்தபோதிலும் **பாண்டுரங்காவில்** மாதுரி திருப்தி யளிக்கும் வகையில் நடித்திருந்தார்.

மாதுரியிடம் நல்ல நடிப்புத் திறமை இருப்பதை அறிந்த பிரகதி பிக்சர்ஸார் தங்கள் **வாயாடி** துண்டு ஹாஸ்யப் படத்தில் அவரை நடிக்கச் செய்தனர். இப்படத்தில் அவரது நடிப்பு எல்லோரது கவனத்தையும் கவர்ந்தது. ரஸிகர்கள் அவரை மிகப் பாராட்டலாயினர். "இந்தப் புது நடிகை யார்? அடுத்தபடி எந்தப் படத்தில் நடிப்பார்?" என்றும் அவர்களை கேட்கத் தொடங்கினர்.

ஆனால் அடுத்தபடி மாதுரி படத்தில் நடிப்பதையே நிறுத்தி விட்டார்! **வாயாடியில்** நடிப்பதற்கே மாதுரி

விடாப் பிடியாய் கெஞ்சிப் பெற்றோர்களின் அநுமதியைப் பெற்றார். அப் படத்தில் நடித்தபின் மாதுரி புஷ்பவதியானார். அதன் காரணமாக, "நீ இனி சினிமாவில் நடிப்பதை அடியோடு

மறந்து விட வேண்டி
யது தான்'' என்று
பெற்றோர்கள் கண்டிப்
பாய் கூறி விட்டனர்.

1-4-''லக்ஷ்மி விஜய''த்தில்
2-''வாயாடி''யில்
3-'' கன்னியின் காதலி''
பரீக்ஷார்த்த மேக்கப்
5-மாதுரி ''சந்திரா''
வாக இருந்தபோது
6-மாதுரியும்மாதுளையும்

மாதுரிக்கோமேன் மேலும் நடித்து, ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆக வேண்டுமென்று ஆசை. ஆனால் பெற்றோர்களின் முட்டுக்கட்டையை அவரால் அப்பொழுது தாண்ட முடியவில்லை.

'மாதுரி சினிமாவில் நடிக்க்கூடாது' என்று அவரது பெற்றோர்கள் தீவிரமாய் தடுத்ததற்குக் காரணம் குடும்ப கௌரவம் தான். மாதுரியின் (தாய்ப்) பாட்டனாரான 'மிலிட்டரி' மாணிக்க முதலியார் அந்தக் காலத்தில் செல்வமும் செல்வாக்கும் மிகுந்து விளங்கி வந்தார். ''பி. ஆர். அண்ட் ஸன்ஸ்'' கம்பெனியில் வேலை பார்த்து வந்த அவர் ஒரு வீணை வித்வானாகவும் விளங்கினார்.

அவரிடம் சிக்ஷை சொல்லிக் கொண்டவர்களில் மாதுரியின் பாட்டியும் ஒருவராவார். ஸ்ரீ. மாணிக்க முதலியாரின் சிக்ஷை சங்கீதத்துடன் நிற்கவில்லை; காதலிலும் ஈடுபட்டது. பிறகு அவ் விருவரும் புருஷன்மனைவியாகவும்

(53-ம் பக்கம் பார்க்க)

பணமும் புகழும்

[ஒரு சினிமாப் பத்திரிகையின் பிரத்தியேக நிருபரின் டைரியிலிருந்து எடுத்து உருவாக்கியது]

சிறு கதை

கொஞ்சம்கூட ஓய்வொழிச்சல் இல்லாமல் வேலை செய்து கொண்டிருந்த நான், 'என்னுடன் வந்து இரண்டுநாள் தங்கிவிட்டுப் போயேண்டா!'' என்று என் நண்பன் ரகு எழுதி என்னை அழைத்தது கண்டு, மகிழ்ச்சி அடைந்தேன். எவ்வித முகாந்திரமும் இல்லாமல் லீவு கேட்டால் கண்டிப்பாக ஆசிரியரும் - மானேஜருமான, ஆராவமுதன் தரமாட்டார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். 'அவசரமாக ஊருக்குப் போகவேண்டியிருக்கிறது' என்று சொல்லி, நண்பன் கடிதத்தையும் காட்டி நான்கு நாள் லீவு வாங்கிக் கொண்டேன். முகம் கோணாமல் ஆராவமுதன் லீவு கொடுத்தது அன்றுதான் முதல் தடவை.

எனக்கு "சினிமாச் சுடர்'' பத்திரிகாலயத்தில் பிரத்தியேக நிருபர் வேலை. காரியாலயத்தில் எனக்கு அதிக வேலையில்லாவிட்டாலும், வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும் வேலை ஏராளமாக இருந்தது. "சினிமாச் சுடர்'' ஆரம்பித்து பத்து வருஷங்கள் ஆகிவிட்டன. பத்திரிகை உலகில்-சினிமா பத்திரிகைகளைப் பொறுத்த மட்டில்-அதற்குத்தான் அதிக மதிப்பு.

நக்ஷத்திரங்களைப் பேட்டி காணுவது தான் எனது முக்கியமான வேலை. இதுவரை எத்தனையோ, பெரிய, பெரிய நக்ஷத்திரங்களையும், 'குட்டி' நக்ஷத்திரங்களையும் நான் பேட்டி கண்டிருக்கிறேன். அதில் எனக்கு அலாதியான ஆர்வம். அதைக் கண்டுதான் ஆராவமுதன் என்னை அந்த வேலைக்கு நியமித்தார். நானும் குறைகள் இல்லாமல் வேலை செய்து வந்தேன்.

லீவு கிடைத்த அன்றே நான் ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன். என் நண்பன் இருந்த ஊர் ஒரு சிறு கிராமம். எத்தனையோ தடவைகள் அவன் என்னை வருந்தி வருந்தி அழைத்திருக்கிறான். ஆனால் நான் அவன் அழைப்பிற்கு செவி சாய்க்கவேயில்லை. இந்தத் தடவை எனக்கே அந்த ஊருக்குப் போய்வர வேண்டும் என்ற ஆசை இருந்தது; கிளம்பினேன். அந்த கிராமத்தில் ரயில் இரண்டே நிமிஷம்தான் நின்றது. ஸ்டேஷன் மாஸ்டர் எதிர்பார்க்காத வகையில் நான் அங்கே இறங்கினேன் என்பது எனக்குப் பிறகுதான் தெரிந்தது. "தினமும் இங்கே யாரும் இறங்குவதேயில்லை. அதேபோல் இன்றும் நினைத்திருந்தேன் நீங்கள் எதிர்பாராத விதமாக இறங்கினீர்கள்'' என்றார் அந்த ஆசாமி. நான் சிரித்து மழுப்பிக் கொண்டே வெளியில் வந்தேன்; ரகு ஸ்டேஷனுக்கு வரவில்லை. அவன் மாட்டு வண்டியை அனுப்பியிருந்தான் வண்டியில் ஏறி உட்கார்ந்தேன். வண்டி ஆடி அசைந்து கொண்டு வீட்டை நோக்கி புறப்பட்டது.

எங்கே பார்த்தாலும் வயல் வரப்புகள் தான் அதிகமாக இருந்தன. அந்தக் கிராமத்தின் அமைதியான சூழ்நிலை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இயற்கைக் காட்சிகளை இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருந்தது.

கிராமத்தின் ஆரம்பத்திலிருந்த பெரிய பங்களா ஒன்று தூரத்துப் பார்வைக்கு அரண்மனைபோல் காட்சி அளித்தது. இந்தக் கிராமத்தில் யார் இவ்வளவு நல்ல பங்களா கட்டிக்கொண்டு வசிக்கிறார்கள் என்றறிய ஆவல் கொண்டு வண்டிக்காரனிடம் கேட்டேன்.

"...ருடைய பங்களாப்பா அது ?" என்று.

"யாரோ சினிமா பொம்புளே இருக்கிரு அதுலே. அவதான் இங்கே ரெண்டு மூணு வருஷமா குடியிருக்கிருங்க!" என்று சொன்னுன் அவன்.

"அவள் பெயர் தெரியுமா உனக்கு?" என்று கேட்டேன்.

"என்னமோ 'ராணி'ங்க. அதெல்லாம் யார் வாயிலிங்க நுளேயுது!"

"என்ன ராணியா! அவள்பெயர் புஷ்பா ராணியா?" என்றேன், சந்தேகத்துடன்.

"ஆமாங்க! ஆமாங்க!! அப்படித்தான் சொல்லி கிட்டாங்க" என்ருன் அவன்.

எனது ஞாபகம் ஐந்தாறு வருஷங்களுக்கு முன் சென்றது.

★

ஒவ்வொரு சினிமா நடிகையையும் நான் பேட்டி கண்டு கொண்டிருந்த இந்த சமயத்தில்தான் சினிமா வானில் புஷ்பாராணி தோன்றிஞள்.

ஓரிரண்டு படங்களிலேயே அவள் நக்ஷத்திரப் பதவியை அடைந்து விட்டாள். யாரும் அவ்வளவு சிக்கிரம்—எனக்குத் தெரிந்து—முன்னேறியதில்லே. ஒன்று, இரண்டு, மூன்று என அவளது படங்கள்—அவள் நடித்ததுதான் வெளிவந்தன. படமுதலாளிகள் தாம் தயாரித்த ஒவ்வொரு படத்திற்கும் அவளேத்தான் "ஹிரோயிஞ"க் கூப்பிட்டார்கள். அவள் எவ்வளவு பணம் கேட்கிருளோ அவ்வளவு பணமும் அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அந்தப் பணத்தை ஒன்றுக்கிரண்டாக எடுத்து விட்லாம் என்ற நம்பிக்கை படமுதலாளிகளுக்கு. அந்த நம்பிக்கையும் வீண் போகவில்லே

புஷ்பாராணி தலே

தூக்கி இருந்த காலத்தில் ஆண் நடிகர்களுள் குமார் நல்ல பெயர் பெற்றிருந்தான். இவர்கள் இருவரும் பெரும்பாலும் சேர்ந்தே நடித்து வந்தார்கள். நல்ல முகவெட்டு, இனிமையான சாரீரம்; அதில்லாமல் இளம் பிராயம்; இம்மூன்றும் அவ்விருவருக்கும் நன்ருகப் பொருந்தி யிருந்தன. குமாரின் நடிப்பு புஷ்பாராணியுடன் சேர்ந்து நடித்தபோது இன்னும் அதிகமாய்ச் சோபித்தது கண்டு அதை நன்ருகப் பயன்படுத்திக் கொண்டார்கள் படமுதலாளிகள்.

புஷ்பாராணி அழகி. வயது பதினெட்டு அல்லது பத்தொன்பதுதான் இருக்கும். அவள் குமாருடன் சேர்ந்து நடிக்கவே விரும்பினாள். தனித்து இருந்தால் புகழ் இன்னும் அதிகமாக ஏற்படும் என்பதை அவள் தெரிந்து கொள்ளவில்லை. நடிக்கும் வேளையைத் தவிர மற்ற நேரங்களிலும் குமார் புஷ்பாவுடனேயே இருக்க ஆரம்பித்தான். அவளும் அதில் சிரத்தை காட்டவில்லை. 'அவனால்தான் தனக்கு எல்லாம்' என்று அவள் நினைத்தாள். சினிமா உலகின் சிறந்த நடிகர்கள் இருவர் இணைவது ஆச்சர்யந்தான். என்றாலும் இவர்கள் சம்பந்தத்தை யாரும் பொருட்படுத்தவேயில்லை.

நான்கூட அவர்கள் இருவரையும் சேர்த்தே பேட்டி கண்டிருக்கிறேன். அந்தத் தடவைதான் "சினிமாச் சுடர்" கூட அதிகம் செலவாகியது.

நாட்கள் மெள்ள நகர்ந்துகொண்டே போயின. இதற்குள் சினிமாவுலகில் எவ்வளவோ விசித்திரங்கள். புதிய புதிய மாறுதல்கள். ஆம்! புஷ்பாராணி விஷயத்தில் கூடத்தான் மாறுதல். எவ்வளவு சிக்கிரம் முன்னுக்கு வந்தாளோ, அவ்வளவு சீக்கிரம் அவள் சினிமா வானிலிருந்து மறைந்தும் விட்டாள். படமுதலாளிகள் அவளை வேண்டாமென்று தள்ளிவிடவில்லை. அவளாகவே விலகி விட்டாள். என்ன காரணமோ? அதுதான் ஒருவருக்கும் தெரியாத விஷயமாக இருந்தது. திடீரென்று சென்னையிலிருந்தே மறைந்து விட்டாள் ஒரு நாள். இதெல்லாம் சினிமாவுலகில் சகஜம் என்று நாங்கள் யாரும் அதை சிரத்தையோடு கவனிக்க ஆரம்பிக்கவில்லை.

குமார் இப்போது தனித்து இருக்கவில்லை. இன்னொரு நக்ஷத்திரத்தைப் பிடித்துக் கொண்டு விட்டான். ஒரு தடவை நான் அகஸ்மாத்தாக அவனைச் சந்தித்தபோது, புஷ்பாராணியைப் பற்றிக் கேட்டேன். "எங்கே போனாளோ, யாருக்குத் தெரியும்?" என்று கூறினான். நானும் அவனிடம் அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை.

அன்று போனவளைப் பற்றி இன்று தகவல் கிடைத்தால் என்னைப்போன்ற ஒரு சினிமாப் பத்திரிகை ஆசிரியன் சும்மா இருப்பானா? அவளை அன்றே பேட்டி காணவேண்டும் என்று தீர்மானித்தேன்.

[தொடர்ச்சி 61-ம் பக்கத்தில்]



சினிமாக் கேள்விகள்

பெ. நடராஜு (ஈப்போ, மலாயா)

தென்னிந்தியாவில் எவ்வளவு ஸ்டுடியோக்கள் இருக்கின்றன? அவை எங்கெந்த ஊரில் உள்ளன?

ஜெமினி, நியூடோன், பிரகதி, சோபனசலா, நெப்டியூன். ஸதர்ன், வாஹினி, ஷிர்டி, ஸ்டார் கம்பைன்ஸ், ஏவி. எம். ஆகிய பத்து ஸ்டுடியோக்கள்சென்னையில் உள்ளன. கோயமுத்தூரில்ஸென்ட்ரல், பக்ஷிராஜா, ஆகியவையும், சேலத்தில் மாடர்ன்தியேட்டர்ஸ், ரத்னு ஆகிய ஸ்டுடியோக்களும் நடந்து வருகின்றன. மைசூரில் நவஜோதி உள்ளது. திருவனந்தபுரத்தில் ஒரு ஸ்டுடியோ இருந்து வருவதாகவும் கேள்வி.

மல்லிகார்ஜுன் (அரசிகேரா)

வி. என். ஜானகிக்குக் கலியாணம் ஆகிவிட்டதா?

தற்போது அவருக்குள்ள தொல்லைகளினுல் அவருடைய கலியாணத்தைப் பற்றிப் பேசினுல் மூஞ்சி சுருங்கி விடுமே!

கு. ராமலிங்கம் (திருவண்ணுமலை)

பாகவதர் நடிக்கப் போகும் அமர கவியைப் பற்றி ஒரு தகவலும் இல்லையே, ஏன்?

இப்படத்திற்கான பூர்வாங்கமான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவாம்.

ஏ. எம். ஷேக் தாவூத் (திருச்சி)

டி. ஆர். மஹாலிங்கம் ஏன் இன்னும் பாகவதர் பட்டம் பெறவில்லை?

பெறவில்லை என்று கேட்டது தவறு; "தாமே வைத்துக் கொள்ளவில்லை?" என்று கேட்டிருக்க வேண்டும். "பாகவதர்" என்பது திறமைக்காக அளிக்கப்படும் பட்டமல்ல.

வி. ஷண்முகம் (மலாயா)

ராஜா செங்கல்வராயன் என்பவர் நடித்த "நேதாஜி சுபாஷ்" படம் வெளி வந்ததாமே? அது என்னவாயிற்று?

படம் வெளிவரவில்லை. படத்தின் விளம்பரம் தான் வெளிவந்தது!

கே. கே. ஜி. தாஸ் (கோட்டயம்)

ராஜகுமாரி படத்தில் நடித்த மாலதி இப்பொழுது என்ன செய்து கொண்டிருக்கிறுர்? எந்தப் படத்தில் நடிக்கிறுர்?

அவர் இப்பொழுது "ரத்னகுமார்" படத்தில் நடித்து வருகிறுர்.

கே. பி. செல்வம் (தோப்புத்துறை)

யூ. ஆர் ஜீவரத்தினம் ஏன் சினிமாவில் நடிப்பதை நிறுத்தி விட்டார்?

குடும்பக் கவலை அவரைப் பற்றிக் கொண்டு விட்டதோ என்னவோ!

ஏ. வி. எல். மணியம்,
(ரக்வான், இலங்கை)

சினிமாப் படம் பிடிப்பதற்கு லாயக்கான கதை எழுதுவதற்கு தங்கள் பத்திரிகை மூலம் ஒரு போட்டி ஏற்படுத்திப் பரிசு வழங்கினுல் என்ன? அதை உங்கள் பத்திரிகையில் தொடர் கதையாகவும் வெளியிடலாமல்லவா? நம் பட முதலாளிகளுக்கும் நல்ல கதை கிடைத்தது மாதிரியாயும் இருக்குமே?

இதெல்லாம் உண்மைதான்; ஆனுல் கடைசியாக நீர் சொல்லியிருப்பது தான் சரியல்ல. நல்ல கதைகள் பலவற்றைத்தானே நம் பட முதலாளிகள் குட்டிச் சுவராயடித்து வருகிறுர்கள்?

'கண்ணன்' (கும்பகோணம்)

டி. ஏ. ஜெயலக்ஷ்மிக்கு விவாஹம் ஆகிவிட்டதா? அவர் யாரை மணந்து கொண்டிருக்கிறார்? குழந்தைகள் உண்டா?

இன்னும் சில மாதங்களில் பிறந்து விடும். அவர் வாசுதேவ மேனன் என்பவரை மணந்து கொண்டிருக்கிறார்.

ஜே. எம். கதிரவன் (துறையூர்)

காளி என். ரத்தினத்தின் சொந்த ஊர் எது? என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? தற்போது எந்தெந்தப் படங்களில் நடிக்கிறார்?

கும்பகோணத்தை அடுத்த சாக்கோட்டையைச் சேர்ந்த காளி ரத்தினம் இசை வேளாளர் ஜாதியைச் சேர்ந்தவர். தற்போது "தேவ மனோஹரி"யில் நடித்துவருகிறார்.

டி. இ. சாமய்யா

(ராபர்ட்ஸன் பேட்டை)

சினிமாப் படங்கள் மூலம் நம் யுவதிகளின் நாகரீகம் முற்றி வருகிறது என்று கூறுகிறார்கள். நீங்கள் அதை ஆமோதிக்கிறீரா?

ஆம்; ஆனால் சில சமயம் அநாகரீகத்தையும் புகுத்தி வைக்கிறது என்று கூடவே சொல்லி வைக்க வேண்டும்.

ஜூபிடரின் "கன்னியின் காதலி"யில் அஞ்சலிதேவி மாதுரி தேவியைக் காதலிக்கிறார்!

வி. தக்ஷிணாமூர்த்தி

(திருக்கழுக்குன்றம்)

பவளக்கொடி படத்தில் அல்லியிடம் விற்கப்படுவது அன்னமா? அல்லது வாத்தா?

அன்னம் என்னவோ இந்த உலகில் இல்லை. அப்படியிருக்க அவர்கள் மட்டும் எப்படிப் படத்தில் அதைக் காட்டியிருக்க முடியும்?

சுல்தான் இப்ரஹீம் (எரவாஞ்சேரி)

சினிமாப் படங்களில் ஒலிப்பதிவு எவ்விதம் செய்யப் படுகிறது?

சினிமாப் படம் எடுக்கும் இடத்தில் 'மைக்' தொங்க விடப் படும். இதன் முன் நடிகர்கள் பேசி நடிக்கும் போது ஏற்படும் ஒலி அலைகளை இக்கருவி மின்சார அலைகளாக மாற்றி த்வனிப் பதிவு இயந்திரத்திற்கு அனுப்புகிறது. அங்குள்ள 'வால்வ்' விளக்குகளும் 'மை'க்கும் கம்பி மூலம் ஒன்றுடன் பிணைக்கப் பட்டிருப்பதால், அவ்வாறு அலைவித்தியாசத்திற்கு ஏற்ற விளக்கு அணைந்து அணைந்து பற்றிக் கொள்ளும். இப்படி ஏற்படும் ஒளி வித்தியாசங்கள் ஒரு துவாரத்தின் வழியாக பில்மின் மீது பதிவாகிறது. பிறகு இந்த ஒலி பில்மையும் ஒளி பில்மையும் ஒன்றன் மீதொன்றாய் வைத்து, வேறு ஒரு பிள்மில் ஒலியை (ஒரு கோட்டு ரூபத்தில்) படத்தின் ஒரு ஓரத்தில் பதிப்பித்து விடுகின்றனர்.

எம். ஜியாவுதீன்

(பதுளை, இலங்கை)

எஸ். வரலக்ஷ்மிக்கு சமையல் செய்யத் தெரியுமா?

தெரியும். வெங்காய சாம்பார் செய்வதில் வரலக்ஷ்மி "எக்ஸ்பர்ட்"டாம்!

எஸ். துரை (சோழவந்தான்)

பாலராஜாவில் வரலக்ஷ்மி கையில் பிடிக்கும் பாம்பு நிஜப் பாம்புதானா?

நிஜப் பாம்புதான். ஆனால் அதற்கு நிஜமாகப் பல் மட்டும் கிடையாது!

மன்னன் வஸந்த குமாரன் இந்தக் கலாவல்லி மேகலா தேவியின் கவர்ச்சிக்கு அடிமையாகிவிட்டதில் ஆச்சரியமென்ன? "கன்னியின் காதலி"யில் அஞ்சலிதேவி.

மு. கணேசன் (தேவகோட்டை)

ஜீ. கோவிந்தன் கம்பெனியாரின் மருத நாட்டு இளவரசி எந்த ஸ்டுடியோவில் தயாராகிறது? அப்படத்தின் முக்கிய நடிக நடிகைகள் யார் யார்?

"இளவரசி" மைசூர் நவஜோதி ஸ்டுடியோவில் தயாராகிறது. அதில் வி. என். ஜானகி, எம். ஜி. ராமச்சந்திரன், சக்ரபாணி, புளிமூட்டை, கொட்டாப்புளி ஜெயராமன், பி. எஸ். வீரப்பா, ஸி. எஸ். டி. சிங் ஆகியோர் முக்கிய நடிகர்கள்.

எஸ். முத்தம்மாள் (தாழக்குடி)

குண்டூசியாரே! நீர் நக்ஷத்திரங்களைப் பற்றி மட்டும் எழுதி வருகிறீர்களே, டைரெக்டர்களைப் பற்றியும் எழுதினால் என்ன?

இந்த யோசனை எனக்கு முன்பே உண்டு. கூடிய சீக்கிரத்தில் தொடங்குகிறேன்.

எம். அநுராதா (கொல்லங்கோடு)

"குண்டூசியைக் கேளுங்கள், கேளுங்கள்" என்று வெளியிடுகிறீர்களே? உம்மிடம் எதைக் கேட்பது? அப்படியானால் உம்மிடம் 'குண்டூசி'யைக் கேட்கட்டுமா?

தமிழ் சினிமா உலகத்தைப் பற்றியும், அதில் சம்பந்தப் பட்டுள்ளவர்களைப் பற்றியும் எதை வேண்டுமானாலும் கேளுங்கள். "குண்டூசி"யைக் கேட்பதிலும் ஆட்சேபனையில்லை ஆனால் வருஷ சந்தா ஆறு ரூபாயை முதலில் மணியார்டர் செய்து விட்டுக் கேளும்!

கா. மு. மணியாறன் (புதுமடம்)

எம். எஸ். விஜயாள் முதன் முதலில் நடித்த படம் எது? தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்? அவரது சொந்த ஊர் எது?

தஞ்சாவூரைச் சேர்ந்த விஜயாள் முதன் முதலில் 'மோஹினி ருக்மாங்கதா" படத்தில் நடித்தார். ஒரு காலத்தில் மிகப் புகழுடன் விளங்கிய

செனனையில் இப்பொழுது வெளிவந்திருக்கும் "ரக்ஷரேகா" தெலுங்குப் படத்தில் அஞ்சலி தேவி.

அவர் இப்பொழுது ஒரு படத்திலும் நடிக்கவில்லை.

என். இந்திரன் (கண்டி, இலங்கை)

குமாரி கமலா இப்பொழுது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

"லாவண்யா" என்ற தமிழ்ப் படத்தில் அவர் கதா நாயகியாக நடித்து வருவதாகத் தெரிகிறது.

என். லக்ஷ்மணன் (யாழ்ப்பாணம்)

கிருஷ்ண பக்திக்குப் பிறகு டி. ஆர். ராஜ குமாரி எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்?

ஏன். "பவளக்கொடி"யில் நீர் அவரைப் பார்க்க வில்லையா? இப்பொழுது "இதய கீதே"த்திலும் "விஜய குமாரி" நடித்துக் கொண்டிருக்கிறார்.

ரதி மோஹனன் (?)

நான் எதிர் பாராத விதமாய் உங்கள் வீட்டிற்கு விருந்தாளியாய் வந்து சேர்ந்தால் நீர் என்ன செய்வீர்?

உம்மை விரட்டுவதற்காக எதிர்பாராத விதமாய் என் மனைவியுடன் நான் சண்டை பிடுவேன் என்று நீர் நினைத்தால், தவறு! அதற்குப் பதில் என் வீட்டிற்கு "எதிர்பாராத விதமாய்" சுண்ணாம் படிக்கும் வேலையை ஆரம்பிக்க நேரிடும்! தெரிந்ததா!

என். மாணிக்கம் (ஒலவக்கோடு)

எங்கள் ஊரில் ஒரு மாரியம்மன் கோவில் இருக்கிறது. அதைப் புனருத்தாரணம் செய்வதற்காக எம். கே. டி. பாகவதர் கச்சேரி செய்து நிதி உதவுவாரா?

பாகவதர் மாரியம்மனிடம் பக்தி கொண்டவர் என்பது உண்மைதான். ஆனால் கச்சேரி செய்வதற்கான சௌகரியங்களை அவருக்கு எழுதித் தான் கேட்க வேண்டும்.

எம். ஏ. ஹசன் (நாவலபிட்டிய)

டி. ஆர். மஹாலிங்கத்தின் சிநேகிதத்தைப் பெற விரும்புகிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டும்?

முதலில் அவருடைய நாயை நீர் எப்படியாவது சிநேகிதம் செய்து கொண்டு விட வேண்டும்!

எம். சுந்தரம் சேர்வை (மதுரை)

குண்டுசியாரே! உம்மைப் போல் எனக்கும் மூளை இருக்கிறது. ஆனால் கிரகம் தான் சரியில்லை. ஆதலால் உம்முடைய காரியாலத்தில் என்னைச் சேர்த்துக் கொள்ள முடியுமா?

கிரகம் சரியாயில்லை என்பதைச் சரியாகத் தெரிந்து கொண்ட நீர் மூளையைப் பற்றியும் சரிவரத் தெரிந்து கொள்ளவில்லையே என்றுதான் வருந்துகிறேன்!

ஏ. எம். குருசாமி (சின்னமனூர்)

பாரதி—பிரகதி கூட்டுத் தயாரிப்பான மின்மினி எப்பொழுது வெளி வரும்?

"பாரதியின் பண முடையும், பிரகதியின் பொருளாதார சிக்கல்களும் தீர்ந்த பிறகு" என்று சொல்லலாம்.

பி. ஆர். ராமசுப்பன் (திருநெல்வேலி)

நவஜீவனத்தில் நடிக்கும் ஸ்ரீராமன் எந்த ஜாதியைச் சேர்ந்த

வர். அவருக்கு விவாஹம் ஆகி விட்டதா? விலாஸம் தெரிவிக்க முடியுமா?

ஓ! முடியும். "c/o ஜெமினி ஸ்டுடியோ, கெதிட்ரல் போஸ்ட், சென்னை"— என்று எழுதும். ஸ்ரீராமன் நாயுடு ஜாதியைச் சேர்ந்த ஒரு குடும்பஸ்தர்.

எம். கார்த்திகேயன், (பேசாலை, இலங்கை)

எம். கே. டி. பாகவதருக்கு எத்தனை குழந்தைகள்?

பாகவதருக்கு இரு பெண்களும், ஒரு ஆணும் உள்ளனர்.

என். ஷண்முகம் (பலாங்கொடை)

எம். எஸ். சுந்தரிபாயின் சொந்த ஊர் எது?

மதுரை, ஆனால் இப்பொழுது குடியேறியிருப்பது சென்னையில்.

ஜெ. ரகுநாதன் நாயர் (மதுரை)

பாகவதர் அடுத்த படியாக நடிக்கப் போகும் படம் அமரகவியா? வித்யாசாகரரா?

பாகவதர் அடுத்த படத்தைப் பற்றிய ஆதாரமாக விவரங்கள் இன்னும் கிடைக்க வில்லை. கிடைத்தவுடன் "குண்டூசி"யில் வெளியிடப்படும்.

என். வி. ராஜாமணி (பம்பாய்)

ஜெமினியின் சந்திரலேகா 35 லக்ஷ ரூபாய் செலவில் தயாரிக்கப் பட்டதாமே? உண்மையா?

உண்மை தான். அது சரி, உமக்குச் சந்தேகம் ஏற்படுவானேன்!

அ. அப்துல் கபூர் (மன்னார்)

குண்டூசியாரே! சினிமாவில் சேர விரும்புபவர்கள் உம்மிடம் கேட்டால் தக்க பதில் அளிக்காததேன்?

சினிமாவில் சேருவதற்கு 'தக்க' வழி இருந்தாலல்லவோ என்னைக் குறை கூறுவதற்கு?

ஷேக் அப்துல் வஹாப், (பொள்ளாச்சி)

டி. ஆர். மஹாலிங்கத்தின் விலாஸத்தை தயவு செய்து தெரிவிக்கவும்?

நெ 129 ராயப் பேட்டை ஹைரோடு. மைலாப்பூர், சென்னை—என்று எழுதும்.

ஏ. மாரியப்பன் (பெரியகுளம்)

எம். ஆர். சந்தான லக்ஷ்மியின் சொந்த ஊர் எது? அவர் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்? குழந்தைகள் எத்தனை?

சந்தான லக்ஷ்மியின் சொந்த ஊர் கும்பகோணம், அவர் சைவ—ஐயங்கார்

"ரத்னகுமார்" படத்தில் என். எஸ். கே. யுடன் கூடி டி. எஸ். துரைராஜும் இப்படிக் காட்சி அளிக்கிறார்.

'மருதநாட்டு இளவரசி' (வி. என். ஜானகி)யை சிந்தனையில் ஆழ்த்தியிருப்பது ஏதோ ஒரு பெரிய ராஜீய விஷயமாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது.

ஜாதியைச் சேர்ந்தவர்! (ஐயர் ஜாதியைச் சேர்ந்த அவர் ஒரு ஐயங்காரை மணந்து கொண்டுள்ளதால் இப்படிக் கூறினேன்!) மூன்று வருஷங்களுக்கு முன் தான் ஸென்ஸஸ் எடுத்தபோது அவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் இருப்பதாகத் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு இந்த எண்ணிக்கை அதிகரித்திருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது!

வி. சேதுராமன் (திருப்பூர்)

கிருஷ்ண பக்தி, மங்கையர்க்கரசி ரத்னகுமார், சுதர்சன் ஆகிய படங்களுக்கு பி. யு. சின்னப்பா வாங்கிய தொகை எவ்வளவு?

இந்தத் தொகையில் அவர் ஒரு சல்லி கூட உமக்குக் கொடுக்கப் போவதில்லை. அப்படியிருக்க உமக்கு எதற்கு இந்தக் கணக்கு?

எஸ். ஷண்முக வேலாயுதம்
(பொள்ளாச்சி)

கிருஷ்ண பக்தி சின்னப்பாவின் சொந்தப் படமா? சின்னப்பா ஏதேனும் சொந்தப் படம் தயாரித்திருக்கிறாரா?

சின்னப்பா பல வருஷங்களாய் மங்காப் புகழுடன் விளங்கி வருவது உமக்குச் சகிக்க வில்லையா என்ன? சின்னப்பா தன் நிலை உணர்ந்தவர் என்பதை மறந்து விட்டீரே?

"முத்து வைத்திய நாதன்"
(சூந்தூர், சேலம்)

ஆர். பாலசுப்ரமண்யத்தின் சொந்த ஊர் எது? அவரது ஜாதி என்ன?

இந்த கும்பகோணத்து 'வாத்தியார்' சைவ பிராமண ஜாதியைச் சேர்ந்தவர்.

ஆர். துரைசாமி (துறையூர்)

மே மாத ஊசியில் பக்ஷி ராஜா ஸ்டுடியோவில் தயாரான படங்கள் கன்னிகா, பவளக்கொடி என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஜெகதலப்ரதாபன், ஆர்யமாலா, சிவகவி ஆகிய படங்களும் மேற்படி ஸ்டுடியோவில் தயாரிக்கப் பட்டவை அல்லவா?

பின்னால் நீர் கூறியிருக்கும் மூன்று படங்களும் பக்ஷிராஜா பில்ம்ஸாரின் வெளியீடுகள் என்பது உண்மை. ஆனால் அவை தயாரிக்கப் பட்டதோ ஸென்ட்ரல் ஸ்டுடியோவில் என்பதை நீர் கவனிக்கவில்லை.

கே. சுப்ரமண்யம் (பங்களூர்)

பி. எஸ். கோவிந்தன் முதன் முதலில் நடித்த படம் எது? அவருக்கு அதிகப் புகழை அளித்த படம் எது?

கோவிந்தன் ஏஞ்சல் பிலிம்ஸார் வெளியிட்ட "லீலாவதி சுலோசனா" மூலம் சினிமா உலகில் பிரவேசித்தார். அவருக்கு "ஆயிரம் தலைவாங்கி அபூர்வ சிந்தாமணி" தான் அதிகப் புகழை அளித்திருக்கிறது.

ஆர். பரஞ்சோதி (காவனூர்)

மரகதா பிக்சர்ஸ் அடுத்த படியாகத் தயாரிக்கும் படம் எது?

அவர்கள் "ஏழு முடி மன்னன்" என்ற தமிழ்ப் படத்தை சமீபத்தில் தான் தயாரித்து முடித்திருக்கிறார்கள்.

அ. ரத்தினம் (கொத்தமங்கலம்)

டி. ஆர். ராஜ குமாரி இதுவரை ஏன் கல்யாணம் செய்து கொள்ளாமலே இருக்கிறார்?

ஒன்று தகுந்த "ராஜ குமாரன்" கிடைக்காததாய் இருக்கலாம். அல்லது அவர் எப்பொழுது "கன்னிகா குமாரி"யாகவே இருந்து விட நினைத்திருக்கலாம்.

ஆ. தங்கவேல் (அரூர்)

என். எஸ். கிருஷ்ணன் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்?

அவர் நாஞ்சில் நாட்டு வேளாளர் ஜாதியைச் சேர்ந்தவர்.

எம். என். மூர்த்தி,
(ராபர்ட் ஸன் பேட்டை)

போஜன் படத்தில் போஜன் காட்டுக்குப் போகும் போது ஒரு உடையிலும் பிறகு காட்டில் வேறு உடையிலும் காட்சி அளிக்கிறாரே? அந்த உடை அவருக்கு எப்படிக் கிடைத்தது?

இந்த உடை பற்றிய விடை எனக்குத் தெரியவில்லை. ஆனால் சினிமாவில் வரும் தந்திரக் காட்சிகளின் வகையில் இதுவும் ஒன்றாயிருக்கும் என்று நீர் நினைத்து விடக் கூடாது

என். குஞ்சிதபாதம்,
(திருவிடைக்கழி)

பி. யு. சின்னப்பாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

அவர் எ. சகுந்தலாவை மணந்து கொண்டதெல்லாம் பழைய விஷயம் ஆயிற்றே, ஐயா?

"என்வியென்" (நாகர்கோவில்)

மஹாலிங்கம் இவ்வளவு நன்றாகப் பாடுகிறாரே? அவர் ஏன் கச்சேரிகள் செய்வதில்லை? எங்கள் ஊருக்கு கச்சேரி செய்ய அழைத்தால் வருவாரா?

தற்போதைக்கு வர மாட்டார். சினிமா உலகம் ஓய்வளித்தால் அவர் சங்கீத உலகத்தில்தான் நுழையப் போகிறாராம்; அதுவரைக் காத்திரும்.

டி. என். கே. ஸ்ரீநிவாஸன்,
(இடை சேவல்)

ஸ்ரீராமுலு நாயுடு டைரெக்ட் செய்த **ஆர்யமாலா, ஜெகதலப்ரதாபன், சிவகவி, கன்னிகா** ஆகிய நான்கு படங்களிலும் எதற்கு அதிக பணவசூல் ஏற்பட்டது?

'நடனராணி' ரமணி சென்ற மாதக் கடைசியில் டில்லி தமிழ் அன்பர்களுக்கு ஒரு நடனவிருந்தளித்தார். தென்னிந்திய சங்கத் தலைவர் ஸ்ரீ. பி. எம். சுந்தரம் அவரது நடனத்திறமையைபாராட்டினார்

"ஜெகதலப்ரதாபனு"க்குத் தான் என்று நினைக்கிறேன்.

மாரிமுத்துப் பண்டிதன் (ஈரோடு)

நாட்டிய ராணியில் பி. எஸ். சரோஜா நடித்து முடித்து விட்டாரா? அல்லது அவர் இன்னமும் சிகிச்சை பெற்று வருகிறாரா?

விபத்திற்குப் பின் சில தினங்களிலேயே சரோஜா சிகிச்சை முடிந்து; நடிக்க ஆரம்பித்து விட்டார். "நாட்டிய ராணி"யை இப்பொழுது பலர் கண்டு களித்து வருகின்றனர்.

எம். ஜோன் (ஈப்போ, மலாயா)

குண்டுசியாரே! உங்களிடம் பதில் பெறுவதற்காக நான் ஒரு "கோணி ஊசியாக" கேள்வி கேட்கப் போகிறேன். என்ன சொல்கிறீர்?

நீர் கோணி ஊசியாக மாறுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் ஞாபக மறதியாக என் வாயையும் தைக்க முற்பட்டீரோ அப்புறம் பதில் கிடைக்காது, ஜாக்கிறதை!

என். மைக்கேல் (ஈப்போ)

'கிட்டப்பா அவதார சிங்கக்குட்டி' வி. எஸ். ஜெயராமன், ஏன் படங்களில் நடிப்பதை நிறுத்தி விட்டார்?

நிறுத்தி விட்டாரா? ஆரம்பித்திருக்கிறார்-என்று சொல்லும். "கிருஷ்ண பக்தி"யில் நடிக்கும் ஸி. எஸ். ஜெயராமன் பிள்ளை இவரேதான் என்பது உமக்குத் தெரியாதா?

க. ராமச்சந்திரன் (காரைக்கால்)

கே. ஆர். செல்லம், கே. சாரங்கபாணி இவர்கள் நடித்த முதல் படம் எது? சேர்ந்து நடித்த முதல் படம் எது?

செல்லம் நடித்த முதல் படம் "கௌசல்யா." சாரங்கபாணி நடித்த முதல் படம் "ராமதாஸ்." இருவரும் முதன் முதலாகச் சேர்ந்து நடித்த படம் "பூம்பாவை."

ஏ. முத்துசாமி (பாலக்காடு)

என் நண்பரொருவர் லலிதா-பத்மினி இருவரையும் விவாஹம் செய்து கொள்ள வேண்டும் என்று கனவு கண்டு வருகிறார்......

பகல் வேளையில்தானே?............!

எஸ். அப்துல் ஜப்பார் (கல்பிட்டிய)

நல்ல தம்பியில் என். எஸ். கிருஷ்ணன் பானுமதியை மணக்க மறுப்பதன் காரணம் என்ன?

அவரை விட ஒரு பெரிய (ராம) கிருஷ்ணன் பானுமதியை முன்னரே மணந்து கொண்டிருக்கிறார் என்பதனால் அல்ல. 'பணத்திமிர் பிடித்த ஜமீன்தாரிணி' என்பது தான் காரணம்.

ச. ஒபுளிசாமி (சேலம்)

கார்ஸிகன் பிரதர்ஸ் போன்ற கதைகளை ஏன் நம் நாட்டவர் படம் பிடிக்கக் கூடாது?

பிடிக்காமலென்ன? ஜெமினி விரைவில் தயாரித்து வரும் "நிஷான்" ஹிந்திப் படமும், "காந்திமதி" தமிழ்ப் படமும் கார்ஸிகன் பிரதர்ஸ் கதையைத் தழுவியது தானே.

"மங்கையர்க்கரசி" படத்தைப் பார்த்தால் நீங்களும் என்னைப்போல் இப்படிச் சிரித்தேயாக வேண்டுமென்று மதுரம் கூறுகிறாப்போலிருக்கிறது.

-முகில்.

"காதலுக்குக் கண்கள் மட்டும் இருந்தா
போதாதா?"—பாலாஜியின் லைலா மஜ்
தமிழ்ப் படத்தில் நடிக்கும் எம். வி. ராஜம்ம

சதா 'ஆடிக் கொண்டேயிருக்கும்
சரஸ்வதி சற்று ஆடாமல் இருக்கிறார்—
"இன்பவல்லி" பட ஸ்டில்லுக்காக!

இத் 'தோகை மயில்' இப்பொழுது
கிளிக்கண்ணி பாடினால் பொருத்தமா
யிருக்கும்! இன்பவல்லியில் மேனகா.



இன்பவல்லி


ரத்னகுமார்


இன்பவல்லி

“பேரீச்ச மரங்களே!...பழங்களே!... பரந்த பாலைவன மணலே!...என் லைலா வைக் கண்டீர்களா?...அவள், எங்கு போனாள்?...”—மஜ்னு மஹாலிங்கம்.

"என்னை எங்கெல்லாமோ தேடுகிறீர்களே! இந்த முகத்திரைக்குப் பின் ஒளிந்து' கொண்டிருப்பது தெரியவில்லையா உங்களுக்கு?"—லலை ராஜம்மா

" ஹலோ, ஹலோ !...சிகப்புத் தொப்பியா?...
...என்னை நம் நாட்டில் சந்தியுங்கள்!...
...கருப்புக் கண்ணாடி...கருப்புக் கண்ணாடி...ஓவர்."

விளம்பரம் செய்யுங்கள்

தமிழ் நாட்டுப் படங்களின் பாடல்கள் முதன்மை ஸ்தானம் பெறுகிறது. இதற்குக் காரணம் தமிழர்கள் சங்கீதம், நடனம் முதலியவைகளில் அதிக பற்றுக் கொண்டவர்களாக இருப்பதினால்தான். இதே காரணத்தாலேயே தான் தமிழ்ப்பட முதலாளிகளும் தங்கள் படங்களில் நன்கு பாடக்கூடியவரை நடிக்கச் செய்தும், அப்படி இல்லையேல், நன்கு பாடக்கூடியவர் குரலை இரவல் வாங்கியும் வருகிறார்கள். இது வரவேற்க வேண்டியதே.

ஆனால் படமுதலாளிகள் ஒரு பெரிய தவறு செய்கிறார்கள், திரைக்குப் பின்பு படத்திற்குப் புகழைக்கொடுக்கும் குரல் இரவல் கொடுப்பவர்களைச் சரியாக விளம்பரப் படுத்துகிறதில்லை. விளம்பரங்களில் நடிக நடிகைகளின் பெயர்களைப் பிரசுரிப்பது போல் குரல் இரவல் கொடுத்தவர்களின் பெயர்களையும் போடுவதில்லை. படத்தின் ஆரம்பத்தில் பெயர்களைக் காட்டும்போது கும்பலோடு கோவிந்தாவாக குரல் இரவல் கொடுத்தவர்களின் பெயர்களைப்போடுகிறார்கள். அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுவதில்லை. மேலும் இன்னார் இன்னாருக்குக் குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பதே இல்லை.

படங்களுக்குப் புகழையும், படமுதலாளிகளுக்குச் செல்வத்தையும் கொடுக்கும் குரல் இரவல் கொடுப்பவர்களைச் சரியாக விளம்பரம் செய்வதுடன், இன்னாருக்கு இன்னார் குரல் கொடுத்திருக்கிறார்கள் என்பதை படத்தின் ஆரம்பத்தில் போடுவதுடன், பாட்டுப் புத்தகங்களிலும் குறிப்பிட வேண்டும். இதை படமுதலாளிகள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சே. மா. சந்திரசேகரன்,
வேலூர்.

சினிமாவில் தேசியக் கொடி

சினிமாக் கொட்டகைகளில் கடைசியில் தேசியக்கொடி காட்டப்படும்பொழுது பொது மக்கள் எழுந்து நின்று அதற்கு வணக்கம் தெரிவிக்க வேண்டும் என்று சர்க்கார் ஒரு அறிக்கை வெகு நாட்களுக்கு முன் வெளியிட்டது. இது நம் நாட்டுக் கொடியின் மதிப்பை நாம் உணர அரிய சந்தர்ப்பம்அளிப்பதாகும்.

ஆனால் எங்கள் ஊரிலுள்ள டைமண்ட் டாக்கீஸில் "முடிவில் தேசியக் கொடி காட்டப்படும். யாவரும் எழுந்து நின்று மரியாதை செய்ய வேண்டும்" என்று முன் கூட்டியே சிலைட் போடுகிறார்கள். கடைசியிலே தேசியக் கொடி காட்டப் படும் பொழுது பெரும்பான்மை மக்கள் மரியாதை செலுத்துவதாகத் தெரியவில்லை. இதே நிலைமைதான் மற்றொரு கொட்டகையிலும் கூட. இவ்விதம் நிகழ்வது தேசியக் கொடியின் மதிப்புக்குப் பங்கம் ஏற்படுவது போலத்தான். இதை ஆட்சியாளர்கள் கவனித்து ஆவன புரிதல் வேண்டும். இல்லாவிடில் நாளடைவில் கொடியின் மதிப்பே போய் விடும்.

த. ப. சாமி,
கும்பகோணம்.

சர்க்கார் கடமை

மதுவை ஒழித்து மக்களை நல் வழிப் படுத்த காத்திருக்கும் நம் சர்க்காருக்கு மற்றுமோர் வேண்டுகோள். மதுவை ஒழித்ததால் குடியர்கள் சீர்திருந்தினர். அதேபோல் பருவத்திலேயே வழிதவறிப் போகும் மக்களைத் திருத்த சினிமாவில் வரும் காம இச்சையைத் தூண்டும் காட்சிகளை ஒழிக்க வேண்டும். இவ்விதக் காட்சிகள் பல படங்களில் தணிக்கையாளர் பார்வையினின்றும் தப்பி மக்களுக்குக் காட்சி அளிக்கின்றன. இதனால் அநேக யுவர்கள் தங்கள் வழி தவறி விடுகின்றனர். எதிர்கால தேசக் காவலர்களாக விளங்க வேண்டிய அவர்

நடனமேடையில் பிரசித்தி பெற்றுவரும் எம். லக்ஷ்மிபிரபாவும் அவரது சகோதரி எம். சரோஜாவும். லக்ஷ்மிபிரபா இப்பொழுது ஜெமினியின் "காந்திமதி" தமிழ்ப் படத்தில் நடித்துவருகிறார்.

களைக் காப்பது சர்க்காரின் கடன் அல்லவா? இதை நன்கு மனதில் பதிய வைத்து சர்க்கார் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

எம். எம். சுபாஸ்சந்திரன்,
சங்கரநயினார்கோயில்.

இதையும் தடுக்கவேண்டும்

சுகாதாரத்தின் கீழ் தியேட்டர்களில் புகை பிடிக்கக் கூடாது என்று சமீபத்தில் சர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வந்தது, பொது மக்களுக்கு நன்மையேயாகும். தியேட்டர்களில் புகை பிடிப்பதால் அதனாலுண்டாகும் புகைக் கூட்டங்கள் அங்கேயே சூழ்ந்து கொண்டு படம் பார்ப்பவர்களை அதை ரசிக்க முடியாதபடி செய்வதுடன், அசுத்த காற்றை சுவாசிப்பதால் சுகாதாரக் குறைவு ஏற்படுகிறது. அதைத் தடை செய்ததன் மூலம் மக்கள் நலமடைகிறார்கள்.

ஆனால் தற்பொழுது நகரங்களிலுள்ள தியேட்டர்களில் "மாட்னி ஷோ" என்று பெயரிட்டு காலை நேரங்களிலும் (அதாவது 10 மணி முதல் 12-30 அல்லது 1 மணி வரையிலும்), மாலை நேரங்களிலும் (அதாவது 3 மணி முதல் 6 மணி வரையிலும்) படம் காண்பிக்கிறார்கள். இப்பகல் நேரங்களில் படம் காண்பிக்கும்பொழுது வெளிச்சம் மிகுதியால் படம் சரியாகத் தெரியாத காரணத்தால், அது சரியாகத் தெரியவேண்டும் என்ற நோக்கத்துடன், காற்றோட்டத்திற்காக உள்ள கதவுகளையும், ஜன்னல்களையும் மூடி வைக்கிறார்கள். இதனால் இயற்கையான காற்றோட்டம் தடுக்கப்பட்டு, அதனால் படம் பார்ப்பவர்கள் படும் கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. மேலும் இப்பகல் வேளைகளில் வெயிலின் கோரம் அதிகமாக இருப்பதால் தியேட்டருக்குள் அதிகமான உஷ்ணத்தால் கொதிப்பு ஏற்பட்டு, மக்கள் மிகவும் கஷ்டப்படும்படியான நிலைமை உண்டா

கிறது. போதாததற்கு படம் தெளிவாக தெரியாத காரணத்தால் படம் பார்ப்பவர்கள் அதை சில மணி நேரங்கள் ஊன்றி கவனிப்பதாலும் கண்களுக்குக் கெடுதி ஏற்படுகிறது. இவைகளால் மக்களின் சுகாதாரம் பாதிக்கப்படுகிறது. இம்மாதிரியாக பல நகரங்களிலுள்ள தியேட்டர்களில் "மாட்னி ஷோ" என்று நடத்தும் ஆட்டங்களைத் தடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என். கே. ஹாஜா மொய்தின்,
கும்பகோணம்.

கவனஞ் செலுத்துவார்களா ?

தமிழில் தயாரிக்கப்படும் படங்கள் எண்ணிக்கையளவில் அதிகமாகிக் கொண்டு போகிறதேயொழிய, இதுகாறும் சிறந்த கருத்துக்கள் உள்ள படங்கள் எதுவும் தோன்றியதாகவே காணோம். சர்க்காரின் விசேஷ கவனமிருந்தால் நிச்சயம் வழி பிறந்தே தீரும். பட முதலாளிகள் இதில் அக்கறை காட்டுவதாக இல்லை கேவலம் பணம் சேகரிப்பதொன்றையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு கண்ட கண்ட படங்களை எடுத்து வந்திருக்கின்றார்கள்; வருகிறார்கள். வெறும் பொழுது போக்கிற்கல்லாமல் மக்களின் அறிவை வளர்க்கக் கூடியனவாகவும் படங்கள் இனி நிறைய தயாரிக்கப்படல் வேண்டும் என்பதை சர்க்காரே அடிக்கடி வற்புறுத்திக் கூறிவந்துள்ளனர், ஆனால் அவர்களோ (படக்காரர்கள்) இதையெல்லாம் கவனித்ததாகத் தெரியவில்லை. பழைய போக்கிலேயே போய்க் கொண்டிருக்கின்றனர்.

பாமர ரஞ்சகமான உல்லாஸப் படங்கள் உற்பத்தி செய்வதால் மட்டும் உண்மையான சேவையை நாட்டிற்குச் செய்தவராகி விடமுடியாது. ஜனங்களின் அறிவு வளர்ச்சிக்கான முறையில் நல்ல கருத்துக்கள் கொண்டவைகளையும் நீதிகளைப் புகட்டக் கூடியவைகளையும் வெளியிடுவதன் மூலமே மக்களுக்கும் தேசத்திற்கும் சிறந்ததோர் தொண்டைச் செய்தவராகிறார்கள் அது அவர்களது கடமையுங்கூட, இதை மனதிலிறுத்திக் கொண்டு இனிமேலாவது உயர்ந்தரக படங்களைத் தயாரிக்க முன் வருவார்கள் என்று நம்புகிறேன்.

ப. முகம்மது இஸ்மாயில்,
இரவாஞ்சேரி.

தடை செய்யவும்

எங்கள் ஊர் சினிமா தியேட்டர்களில் விளம்பரத்திற்காக காட்டப்படும் ஸ்லைட்களில், நம் தேசத்தின் புனித சின்னமாகிய மூவர்ணக்கொடி, உலகம் போற்றும் உத்தமர் காந்தி, நாட்டின் நலனுக்காக வாழ்க்கையை தியாகம் செய்த மாபெரும் தலைவர்கள் முதலியோர்களின் புகைப் படங்களை பீடி, சுருட், புகையிலை விளம்பரங்களுக்காக உபயோகிக்கிறார்கள். காந்தியத்தை கனவில்கூட நினைத்திராத இவர்கள் காசுக்காக இத்தகைய விளம்பரங்கள் செய்கிறார்கள். பூஜிக்கத் தகுந்த புண்ணிய மூர்த்திகளையும், புனித சின்னங்களையும் இவர்கள் வியாபாரத்துக்கு உபயோகிக்கிறார்கள். இது மாபெரும் தவறு. சர்க்கார் உடனே இத்தகைய செய்கைகளைத் தடை செய்யவேண்டும்.

செ. இராமலிங்கம்,
திருநெல்வேலி.

அறிவூட்டும் படங்கள்

மேல்நாடு வடநாடு முதலிய படங்களுக்கு நிகராக தமிழ்ப் படங்களையும் இப்பொழுது தயாரித்து வருகிறார்கள். டெக்னிக்கில் அவர்களை விடக்கூடமிஞ்சி விட்டார்கள் எனலாம். ஆனால் அவர்களைப் போல் அறிவூட்டும் படங்களைத் தயார் செய்ய நமது படமுதலாளிகள் இன்னும் முன்னேற்றமடையவில்லை. பொது மக்களிடமிருந்து காசுபறிக்கும் வகையிலேயே படங்களைத் தயார் செய்கிறார்கள். இது கண்டிக்கத் தக்கது. படமுதலாளிகள் பணத்தைக் குறியாக வைத்திருப்பதுபோல், நாட்டின் நன்மையைக் கருதி, நல்ல அறிவூட்டும் படங்களையும் தயாரிக்க வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்ப் படங்கள் மேல்நாடு, வடநாட்டைப்போல் சிறந்து விளங்க முடியும்.

ம. து. அ.
இளையான்குடி.

'பரிசு பெற்ற கடிதம்

★

எழுதியவர் :

சே. மா. சந்திரசேகரன்,
வேலூர்.

குறிப்பு :
முழு விலாஸம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

"நாட்டியராணி"யில் பி. எஸ். சரோஜாவும், புதிய நடிகர் ராஜாமணியும்

பெருங்காய டப்பா

சென்னை பிராட்வே டாக்கீஸ் இருக்கிறதே அது மிகப் பழமையானது. ஒரு காலத்தில் 'நேஷனல் பிக்சர் பாலெஸ்' என்ற பெயரில் மிகப் பிரபலமாக இருந்தது. 'பிராட்வே டாக்கீஸ்' ஆன பிறகு முதல் தர படத் தியேட்டராக ஜார்ஜ் டவுன் மஹாஜனங்களால் புகழப் பட்டது. இவ்வளவு பிரபலமடைந்த தியேட்டர் இன்றுள்ள நிலைமையைப் பார்த்தால் ஒரு காலத்தில் "பெருங்காயம் இருந்த டப்பா"வான அத்தியேட்டருக்கே போக வேண்டாம் என்று தோன்றுகிறது.

பிராட்வே டாக்கீஸ் தோன்றியதிலிருந்து இன்று வரை செய்து வந்த சீர்திருத்தம் சமீபத்தில் தியேட்டரின் முன் பாகத்தை இடித்து உயரமாகக் கட்டியது தான். மற்றபடி உள்ளே நேஷனல் பிக்சர் பாலெஸ் காலத்து நாற்காலி, பெஞ்சு, மின்சார விசிறிகள்தான். இதே போலத்தான் இத்தியேட்டரின் ஆசனங்களில் குடியிருந்து வரும் மூட்டைப் பூச்சியார்களும். அவர்களை வெளியேற்ற, வீட்டு வசதி கண்ட்ரோலர் 'பழங்காலக் குடிகள்' என்ற காரணத்தால் அனுமதி கொடுக்க மறுத்து விட்டாரோ என்னவோ! அவர்கள் பொது ஜனங்களைப் பதம் பார்ப்பது படத்தையே பார்க்காதே என்கிறது. இதே போலத்தான் தியேட்டரில் போடப்பட்ட ஆசனங்களும், அவைகள் ஒரு காலத்தில் நெருக்கமாகப் போடப்பட்டிருந்ததை இன்னமும் அப்படியே வைத்திருக்கிறார்கள். ஒரு மனிதன் தாராளமாகப் போகக் கூட வழியில்லை.

தியேட்டரின் மிஷின்களும் மிகப் பழமையானது. அவைகள் அக்காலத்தில் நன்கு வேலை செய்திருக்கலாம். அதற்காக தன் கடமையைச் சரிவரச் செய்யத் தவறிய ஒன்றை வைத்துக் கொண்டு என்ன செய்வது?

இதை அதன் எஜமானர்கள் அறிந்திருந்தும் அலட்சியமாகவே இருந்து வருகிறார்கள்.

இப்படி பழங்கால ஆசனங்களும், பழைய குடித்தனக்காரரான மூட்டைப் பூச்சியார்களும், அழுக்குவைக்க வேண்டிய மிஷின்களும், உள்ள பொது ஜனங்களுக்கு வசதிக் குறைவுமான இத்தியேட்டரைப் பற்றி மேலும் என்ன சொல்வதென்றே தெரியவில்லை. முதலாளிகள் இக்குறைகளையெல்லாம் நீக்கி, "பிராட்வே டாக்கீஸை" ஒரு சிறந்த தியேட்டராக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மணி,
சென்னை.

பெயர்களை மாற்றவும்

சினிமாக் கொட்டகைகளில் படம் காட்டும் திரைக்கு முன்னால் வாளிகள் வைத்திருக்கிறார்கள். அவ்வாளிகளின் மேற்புறத்தில் 'தீ, நெருப்பு' என எழுதியிருக்கிறது. உண்மையாக அவ்வாளிகளுக்குள் பார்த்தால் தீயும் இல்லை; நெருப்பும் இல்லை. தண்ணீரும், மணலும் இருக்கிறது. திரையில் தீப்பிடித்தால், தீயை அணைப்பதற்காக வாளிகளில் தண்ணீரும் மணலும் வைத்திருக்கிறார்கள். தண்ணீரும், மணலும் உள்ள வாளிகளில் 'தீ, நெருப்பு' என ஏன் எழுதுதல் வேண்டும்? பெரும்பாலான கிராமவாசிகள் உண்மையாகவே அவ்வாளிகளில் தீ இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நெருப்புப் பிடித்துக் கொண்டால், அவர்கள் அந்தந்த வாளிகளில் உள்ள மணலையும், தண்ணீரையும் உபயோகிக்கவா போகிறார்கள்! உள்ளதை உள்ளபடி எழுதாமல் இல்லாத ஒன்றை இருப்பதாக எழுதினால் விஷயம் தெரியாதவர்களுக்கு வீண் சிரமம் தானே? இதை சம்பந்தப் பட்டவர்கள் கவனிக்க வேண்டுமாய்க் கோருகிறேன்.

ரதிமோகன்,
மதுரை.

பிரம்மலோகம்

நிஷான்

செப்டம்பர் மாத மத்தியில் "நிஷான்" திரையிடப்படும் என்பது நிச்சயமாகி விட்டது. ஆகவே ஜெமினி ஸ்டுடியோ முழுவதும் "நிஷான்"(ஹிந்தி) படத் தயாரிப்பிலேயே மூழ்ந்திருக்கிறது. இரவும், பகலும் இடைவிடாது படப்பிடிப்பைத் தொடர்ந்து நடத்தி வருகிறார் டைரெக்டர் எஸ். எஸ். வாஸன். பானுமதி, நாகேந்திர ராவ், காஸ்யப் மூவரும் தோன்றும் காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப் பட்டது.

ஒளவையார்

டைரெக்டர் கொத்தமங்கலம் சுப்பு, காமிராமென் தம்புவுடன் சென்று மதுரை, திருச்சி, ஸ்ரீரங்கம் போன்ற நகரங்களில் சில வெளிப்புறக் காட்சிகளை "ஒளவையார்" படத்திற்காகப் படம் பிடித்து வந்திருக்கிறார்.

வாழ்க்கை

ஏவி. எம். 'வாழ்க்கை' தீபாவளியன்று முக்கியமான பல நகரங்களில் திரையிடப்படுமாம். பி. எஸ். சரோஜாவுக்குப் பதில் இப்படத்தில் வைஜயந்தி மாலா நடிக்கிறார். சமீபத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், ஏழுமலை சம்பந்தப் பட்ட ஹாஸ்யக் காட்சிகள் படமாக்கப் பட்டன. லலிதா - பத்மினி நடனமும் படத்தில் இருக்கும்.

பாரிஜாதம்

லாவண்யாவின் "பாரிஜாதம்" நியூடோன் ஸ்டுடியோவில் கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் டைரெக்‌ஷனில் வளர்ந்து வருகிறது. சமீபத்தில் நாகாசுரன் தர்பார் காட்சி படமாக்கப் பட்டது. இந்த தர்பாரில் தாரா சௌத்ரி ஒரு நூதன நடனம் ஆடியிருக்கிறாராம்.

தேவமனோஹரி

'தேவமனோஹரி' தமிழ்ப் படம் இம்மாத முடிவுக்குள் திரையிடத் தயாராகி விடுமாம். இப்படத்திற்காக பானுமதி ஆடியுள்ள குறத்தி நடனம் கனஜோராக அமைந்திருக்கிறதாம். இப்படத்தில் சேர்க்கப் படுவதற்காக லலிதா-பத்மினி, ராகினி சகோதரிகளின் குலேபகாவலி நடனம் தயாராகி வருகிறது.

"மங்கையர்க்கரசி"யில் அஞ்சலி தேவி.

சபிபத்தில் ஸ்ரீ சாயி மடம், வித்வத் சபை, தியாகபிரம்ம பக்தஜன சபை இவைகளில் எம். எஸ். கல்பகத்தின் வீணை வாய்ப்பாட்டுக் கச்சேரிகள் நடைபெற்றன.

ரத்னகுமார்

முருகன் டாக்கீஸாரின் "ரத்ன குமார்" படப்பிடிப்பு சீக்கிரமே முடிவடைந்து திரையிடத் தயாராகி விடுமென்று தெரிகிறது. பானுமதி, சின்னப்பா பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படத்தில் கிருஷ்ணன், மதுரம், துரைராஜ் ஹாஸ்ய விருந்தளிக்கின்றனர். எம். கே. மீனலோசனிக்குப் பதில் கே மாலதியும், தாகர் கோயில் மஹாதேவனும் புதிதாக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

பொன்முடி

எல்லிஸ் ஆர். டங்கனின் டைரெக்ஷனில் "பொன்முடி" படப்பிடிப்பு வெகு ஜரூராக மாடர்ன் தியேட்டர்ஸில் நடைபெற்று வருகிறது. மாதுரிதேவி, நரசிம்ம பாரதி பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் "மதுரை வீரன்" நடன நாடகம் விசேஷ அம்சமாக இருக்குமாம். இப்படத்திலும் மாதுரி தேவிக்கு சில விநாடி நேரம் ஆண் வேஷம் உண்டாம்.

இன்பவல்லி

சியாமளா பிக்சர்ஸாரது "இன்பவல்லி"யில் மந்திரவாதி தோன்றும் சில காட்சிகள் படமாக்கப்பட்டு வருகின்றன. மஹாலிங்கம், சரோஜா பிரதம பாகத்தில் நடிக்கும் இப்படத்தில் மந்திரவாதியாக எம். ஆர். சுவாமிநாதன் நடிக்கிறார். காமெடியன் டி. வி. சேதுராமன் தோன்றும் சில காட்சிகளும் சமீபத்தில் படமாக்கப் பட்டனவாம்.

கிருஷ்ண விஜயம்

சுந்தர் ராவ் நட்கர்னியின் டைரெக்ஷனில் ஜுபிடரின் "கிருஷ்ண விஜயம்" பூர்த்தியாகிவிட்டது. என். ஸி. வசந்த கோகிலம், திருச்சூர் பிரேமாவதி நரசிம்ம பாரதி, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தில் லலிதா-பத்மினி நடனமும் இருக்குமாம். இப்படம் தீபாவளி யன்று ரஸிகர்களுக்குக் காட்சி அளிக்கும்.

நாடகப் புகழ் சாயிராம் இப்பொழுது சினிமாவில் சக்கை போடு போடுகிறார். இது "கன்னியின் காதலி"யில் அவரது தோற்றம்.

லைலா மஜ்னு

பரணி பிக்சர்ஸின் தெலுங்கு லைலா மஜ்னு அநேகமாக முடிவடைந்து விட்டதாம். இப்பொழுது அவர்கள் அதைத் தமிழ்ப் படுத்தும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறார்களாம். பானுமதி, நாகேஸ்வரராவ் நடித்திருக்கும் இப்படத்தை தமிழ்ப்படுத்தும் பொறுப்பு ஜி. ஆர். ராவ் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதாம்.

விஜயகுமாரி

டி. ஆர். ராஜகுமாரி, பாலையா, ராம்சிங் பிரதம பாகங்களில் நடிக்கும் ஜுபிடரின் 'விஜயகுமாரி' படப்பிடிப்பு ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில் நடைபெற்று வருகிறது. ராம்சிங் இப்படத்தில் நொண்டிக்கால் சர்வாதிகாரியாக நடிக்கிறாராம்.

மருதநாட்டு இளவரசி

கோவிந்தன் கம்பெனியாரின் "மருதநாட்டு இளவரசி" காசிலிங்கம் டைரெக்ஷனில் உருவாகி வருகிறது. இப்படத்தில் வி. என். ஜானகி கத்திச் சண்டை போடுகிறாராம். லலிதா பத்மினியின் கட்டப்பொம்மு நாட்டியம் இருக்குமாம். புதிதாகச் சில பாட்டுகளைச் சேர்க்க லக்ஷ்மணதாஸை ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள்.

புஸ்தகப் பொழுது

பிளவுங்கள் இலங்கையை!

[எழுதியவர்: செ. நடராஜா, பிரசுரம்: மோகன அண்ட் கம்பெனி, 66, முதலாம் குறுக்குத் தெரு, கொழும்பு. விலை 40 சதம்.]

இலங்கையில் ஒரு 'பாகிஸ்தான்' ஏற்பட்டால் என்ன ஆகும் என்பதை ஆராயப் புகுந்த இதன் ஆசிரியர் வசைமாறியில் இறங்கியிருக்கிறார். ஒவ்வொரு இடத்திலும் யாரோ சுயநலமிகள் இலங்கைத் தமிழர்களைக் கெடுக்கிறார்கள் என்று கூறுகிறார். ஆனால் ஆசிரியரே பிரிவினையைக் கூறுகிறார். சிங்களத் தமிழர், இந்தியத் தமிழர் என்று தமிழர்களை இரு கூறாகப் பிரிக்கிறார் ஆசிரியர். இதுவே முதல் துவேஷப்பிரசாரமாகும். மேலும் இன்று இலங்கை அரசாங்கம் நடந்து கொள்ளும் முறையை ஆசிரியர் நன்கு உணரவில்லை என்றே தோன்றுகிறது. இலங்கையிலிருந்து நூற்றுக் கணக்கான இந்தியர் தம் தாய் நாடு திரும்புவதைக் கண்டாவது ஆசிரியர் தெரிந்து கொள்ளட்டும். ஆசிரியர் வாக்குப்படி ஈழத்து மண்ணிலே பிறந்த தமிழன் என்று சர்வ பாத்தியதையுடன் உரிமை பாராட்டக் கூடிய தமிழன் 'இன்று எப்படி இலங்கையில் தவிக்கிறான்' என்பதை ஆசிரியர் நன்கு சிந்தித்துப் பார்க்கட்டும்.

மேலும் தாம் கூலிக்குப் பேனா பிடிக்கவில்லை என்று கூறிக் கொண்டு "இலங்கை இந்தியர்பிரஜாஉரிமை விஷயத்தில் இலங்கை அரசாங்கம் வெகு தாராள மனப்பான்மை" காட்டுவதாகக் கூறுகிறார். இதிலிருந்தே ஆசிரியர் மனப்பான்மை எத்தகையது என்பது நன்கு விளங்கும். ஆனால் ஒரு விஷயத்தில் நான் ஆசிரியரைப் பாராட்டுகிறேன். "இரு பெரும் சமூகங்களான சிங்கள—தமிழ் மக்களுள் நிரந்தர ஒற்றுமையின்றேல் இலங்கை சுதந்திர நாடாக வாழ முடியாது." இப்படி அவர் ஒரு இடத்தில் கூறியிருப்பதை முதலில் ஆசிரியர் தம் செயலில் காட்டினால் நலமாக இருக்கும்.

இவ்வளவு கூறிய பிறகு தமிழர்களுக்கு ஆசிரியர் கூறிய ஒன்றைச் சொல்லுகிறேன். ஒருவர் எத்தேசத்தில் வசிக்கின்றாரோ அதையே தம் தாய் நாடாகக் கருத வேண்டும் என்று ஆசிரியர் கூறுவதை நான் முழுமனதுடன் வரவேற்கிறேன். அதுதான் விவேகமும் கூட.

இப்புத்தகத்தில் 'சில நல்ல அம்சங்களும், பல துஷ்பிரசாரங்களும் இருக்கின்றன. மொத்தத்தில் படிக்கக் கூடியது.

மாப்பிள்ளை வேட்டை

[ஆசிரியர்: ரஞ்சன். வெளியிட்டோர். நாட்டியம் (புத்தக இலாகா.) கெதீட்ரல் போஸ்ட், சென்னை — 6. விலை ரூபாய் இரண்டு.]

இது ஒரு தழுவல் நாடகம். பிரசித்தி பெற்ற ஆங்கில நாடகாசிரியர் ரிச்சர்ட் பிரின்ஸ்லி ஷெரிடன் (R. B. Sheridan) எழுதிய The Duenna என்ற ஹாஸ்யச் சித்திரமொன்றைத் தழுவி எழுதப்பட்டிருக்கிறது இந்த தமிழ் நாடகம். ஆனால் முயற்சி வெற்றி பெறவில்லை என்பதை முதலிலேயே சொல்லி விடுகிறேன். அத்துடன் ஆசிரியர் இந்த நாடகத்தைத் தழுவல் என்று வெளிப்படையாகவும் சொல்லியிருக்கலாம். அப்படிச் செய்யாதது மிக வருந்தத்தக்கது.

மாப்பிள்ளை வேட்டை! பெயரைக் கேட்டதுமே சிரிப்பு வரும். இதென்ன கேலிக் கூத்து என்று தோன்றும். புத்தகத்தைப் படித்தால் வாஸ்தவமாகவே இது வெறும் கேலிக் கூத்துதான் என்று நிச்சயமாகிவிடும். மாப்பிள்ளைகள் அவர்களுக்கு மனைவிகளாகப் போகிறவர்களினால் வேட்டையாடப்படுகிறார்கள். ஜயா கார்மேகம் என்ற போலி ஜமீன்தாரையும், கதா நாயகி குணவதி காதலன் சுகுணனையும், அவளது தோழி சுந்தரி தன் அன்பன் சுந்தரனையும் நாடக முழுவதிலும் துரத்திப்பைத்தியமாயடித்து விடுகிறார்கள்.

ஜமீன்தார் நீலமேகம் பிள்ளை தன் பெண் குணவதியை பக்கத்தூர் (போலி) ஜமீன்தார் கார்மேகத்திற்கு மணம் செய்து வைக்க பிடிவாதமாக இருக்கையில், குணவதி தன் தோழி ஜயாவின் உதவியால் வீட்டிலிருந்து வெளியேறி,

தலை மறைவாக தன் காதலன் சுகுணனைத் தேடிச் செல்லுகிறாள். வழியில் அகஸ்மாத்தாக சந்திக்க நேர்ந்துவிட்ட கார்மேகத்திடம், தன் பெயர் சுந்தரி என்று சொல்லி, சுகுணனை அவன் மூலமாகவே சந்திக்க ஏற்பாடு செய்து அடைகிறாள். இதனிடையில் குணவதியின் தோழி ஜயா குணவதியாக நடித்து நீலமேகம் பிள்ளைக்குத் தெரியாமல் கார்மேகத்தை தன் வலையில் சிக்கவைத்து பலவந்த மணம் புரிந்து கொண்டு திரும்புகிறாள். கடைசியில் நீலமேகம் பிள்ளை கார்மேகத்தின் சூழ்ச்சிகளை அறிந்து இளம்காதலர்கள் சுகுண-குணவதியரை மன்னித்து மணம் செய்து வைக்கிறார் என்பதே கதை.

இந்த நாடகத்தைப் படித்துச் செல்லுகையில் அநேக இடங்களில் இது தடுமாறுகிறது; தளர் நடை போடுகிறது. அத்துடன் துண்டு துண்டாக வெட்டியது போல பேசுகிறார்கள் பாத்திரங்கள் அனைவரும். இதை எழுதியவர் 'ரஞ்சன்' என்பதை நினைக்கும்போது இந்தக் குழப்பத்தை சகிக்க முடியவில்லை. ஒரு ஆங்கில இலக்கியப் பட்டதாரிக்கு நாடகத்தின் இயற்கையமைப்பு சரிவர விளங்காதது அதிசயமாகவே இருக்கிறது. அவர் இந்த நாடகத்தை சற்றுக் கூர்ந்து கவனித்து காட்சிகளை சரிவர பாகுபாடுபடுத்திச் சீர் செய்து இன்னும் சாவதானமாகவே வெளியிட்டிருக்கலாம் என்றே சொல்லுவேன்.

நாடகத்தில் வரும் சம்பாஷணைகளின் நடை சுபாவிகமாக இல்லை. தமிழ் வாசனை என்பதே இச் சம்பாஷணைகளில் கிடையாது. துண்டு துண்டாகத் தொக்கி நிற்கிறது சம்பாஷணை அசம்பாவிதமாகவும் இருக்கிறது. அர்த்தமும் சில இடங்களில் விபரீதமாக, கேலிக் கூத்தாக அமைந்திருக்கிறது.

உதாரணமாக, இந் நாடகத்தின் வில்லனாக வரும் கார்மேகம் அடிக்கடி கூறும் "இந்தக் கார்மேகத்தின் சிறிய மூளை எவ்வளவு கூர்மையாக வேலை செய்கிறது பார்த்தாயா?" என்ற பேச்சு ஆங்கில மூலத்தில் வரும் "A Nice Stroke of Cunning. eh! My little brain never fails" என்பதற்கு நேர் தமிழ் அர்த்தமாக இருந்தாலும் அவ்வளவு சுகப்படவில்லை. பைத்யக்காரனது பேச்சுபோலத் தென்படுகிறது. ஆங்கிலத்தில் ஷெரிடன் நமக்குக் காட்டிய வரட்டு ஜம்ப கார்மேகத்திற்குப் பதிலாக பைத்யக்கார ஆஸ்பத்திரியிலிருந்து தப்பி வந்துவிட்ட கார்மேகத்தையே நமக்கு சித்தரிக்கிறார் தமிழ் ஆசிரியர். இச் சொற்றொடரை நேர் அர்த்த மொழி பெயர்ப்புக்குப் பதிலாக ரஞ்சன் இதை, "நம்ம யுக்தி எப்படி?" என்று கார்மேகம் அடிக்கடி மார்தட்டி வீண் பெருமையடித்துக் கொள்வதாக காட்டியிருந்தால் அவனை இன்னும் ஜீவனுள்ள ஒரு கதா பாத்திரமாக வரட்டு ஜம்ப மனிதனாகக் காட்டியிருக்கலாம். மூலக் கதையில் கார்மேகத்தின் (Issac) பாத்திரம்தான் பிரதான்யம் வகிக்கிறது. அவனது வரட்டு ஜம்பமும் கோமாளித்தனமான பேச்சும், நடையும், அவனது குட்ர யுக்தி மூளை செய்ய முயற்சிக்கும் சூழ்ச்சிகளுமே நாடக முழுதும் பரவி நின்று, அவனை ஒரு ஜீவனுள்ள வில்லனாக நமக்குக் காட்டுகின்றன.

இந்த நாடகத்தில் நாம் சந்திக்கும் கார்மேகமோ வெனில் நம் நாட்டுக் குறத்தி கையில் ஆடுமே ஒரு பொம்மை—கிச்சு கிச்சென்று சத்தத்தோடு கையையும் காலையும் வலிப்பு வந்தாற் போல மேலும் கீழும் ஆட்டிக் கொண்டு, அப்படிக் காட்சியளிக்கிறான். அவனது பேச்சில் ஜீவனில்லை, சுபாவிகத் தன்மையில்லை அவனது பேச்சு வெட்டுண்ட பிணக் குவியலாகப் படுகிறது நமக்கு.

அவனை தன் விரலில் சுற்றி வளைக்கும் ஜயாவின் விஷயமோ வெனில் ஆங்கிலத்தில் வெகு அழகாக வார்க்கப்பட்டிருக்கிறது. இங்கே தமிழிலே சுரத்தில்லாமல் விளங்குகிறாள் அவள்.

"மருமகப் பிள்ளை சீர் வகைகள்" என்று ஒரு புதிய முறையையும் இந் நாடகாசிரியர் சேர்த்திருக்கிறார். அது என்ன என்பதை அவர்தான் விளக்க வேண்டும்.

நாடகத்தின் பிரதான பாத்திரங்கள் இரண்டுக்குமே இந்த கதி யென்றால் இதில் வரும் மற்ற பாத்திரங்களைப் பற்றி என்ன சொல்ல விருக்கிறது? அவர்கள் யாவருமே வெறும் நடமாடும் நிழல் சித்திரங்கள். அதுவும் மங்கலான விளக்கில் நமக்குத் தெரியும்—சரிவர உருப் பிரியாத நிழற் குவியல்கள். அவ்வளவுதான். வேறு ஒன்றுமில்லை.

இந் நாடகம் நடிப்பதற்கு ஏற்றதல்ல. படிப்பதற்கும் கூட பொறுமை வேண்டும்.

இப்படி 96-பக்கங்களில் வெகு சாதாரண கட்டுக் கோப்புடன் விளங்கும் புஸ்தகத்திற்கு விலை 2 ரூபாய் என்று வைத்திருப்பதைக் கண்டால் 'அப்பாடா' என்றுதான் சொல்வார்கள்.

—'சுதர்சன்'

நுனிப்புல்

வெட்டுக்கிளி

பட்டங்களைத் துறக்க வேண்டுமென இந்திய காங்கிரஸ் தீர்மானம் செய்தது. அதன்படியே பல பிரமுகர்கள் தங்கள் பலவிதமான பட்டங்களை துச்சமென ஒதுக்கித் தள்ளினார்கள்.

* * *

நமது நக்ஷத்திரங்கள் அப்படியெல்லாம் ஒன்றும் செய்து விடவில்லை. அதற்கு மாறாக அவர்களுக்கான பட்டப் பெயர்கள் (அவர்களில் சிலரது தேகத்தைப் போல!) ஒன்றுக்கு நாலாகப் பெருகி வருகிறது!

* * *

“**ப**ட்டம் பதவி பெறப் பாட வில்லை ஐயா” என்று பாடியிருக்கும் எம். எஸ். சுப்புலக்ஷ்மியை முதலில் எடுத்துக் கொள்ளுங்கள். அவர் இப்படிப் பாடியிருக்கிறாரே தவிர, அவருக்குள்ள பட்டங்களான ‘கோகில கான’த்தையோ, ‘இசை வாணி’யையோ அவர் வேண்டாமென்று வெறுத்துத் தள்ளி விடவில்லை.

* * *

‘**ந**கைச் சுவை அரசு’ என்றால் சினிமா அகராதியில் என். எஸ். கிருஷ்ணன் என்பது தான் பொருள். சமீபத்தில் திருச்சியில் சில அபிமானிகள் கூடி அவரை ‘புரட்சி விகட வேந்தர்’ என்று உயர்த்தியிருக்கிறார்கள். விஸ்வாமித்ரா பட விளம்பரமோ அவரை ‘ஹாஸ்யரத்தினம்’ ஆக்கி விட்டிருக்கிறது.

* * *

சாதாரண கோகிலத்தின் கீதமே காதுக்கு இனிமையாக இருக்கும். அதுவே வஸந்த காலத்துக் கோகிலமாக இருந்து விட்டால் கேட்கவா வேண்டும்! ஆகவே, ‘மதுரகீத வாணி’, ‘கான சூடாமணி’ என்றெல்லாம் என். ஸி. வஸந்தகோகிலத்திற்கு பட்டங்கள் சூட்டிப் புகழ்வதில் அர்த்தம் இருக்கிறது.

* * *

‘**க**ந்தர்வ கானம்’ என்பது எப்படியிருக்குமோ நமக்குத் தெரியாது. எம். கே. தியாகராஜ பாகவதர் பாடுவது கந்தர்வ கானம் போல் இனிமையாக இருக்க வேண்டும். இல்லாமலா அவருக்கு ‘கந்தர்வ கான ரத்தினம்’ என்ற பட்டம் கபாலீஸ்வரரின் முன்னிலையில், மந்திரி கனம். பக்தவத்ஸலத்தால் அளிக்கப் பட்டது?

* * *

பாகவதருக்கு ஏற்கனவே ‘இசை வாணர்’ என்ற பட்டம் இருக்கிறது. அத்துடன் கூட, தருமபுர ஆதீன கர்த்தா, ‘சப்தஸ்வர விஷாரத்’ (ஏழிசை மன்னன்) என்ற பட்டத்தையும் அவருக்கு அளித்திருக்கிறார்.

* * *

இசைகளைத் தாம் இழுத்த இழுப்பிற்கு வருமளவுக்கு வைத்திருக்கும் எம். எம். தண்டபாணி தேசிகரை ‘இசை அரசு’ என்ற பட்டப் பெயர் கொடுத்து அழைப்பது மிகப் பொருந்தும்.

* * *

‘**கோ**கில கானம்’ என்ற பட்டத்தை ஏற்கனவே எம். எஸ். சுப்புலக்ஷ்மி தட்டிக் கொண்டு போய்

இப்பொழுது வெளி நகரங்களில் வெளிவந்து ஓடிக் கொண்டிருக்கும் "மாயாவதி" தமிழ்ப் படத்தில் அஞ்சலிதேவியின் ஒரு தோற்றம்.

விட்டதில்லை, அதை அப்படியே திருப்பி, எம். எல். வஸந்த குமாரி 'கான கோகிலம்' ஆகிவிட்டார்!

* * *

சிறுகளத்தூர் சாமா உண்மையில் சிறந்த நடிகர். அப்படி இல்லாமலா 'திரை அரசன்' என்ற பட்டத்தை நாமக்கல் கவிஞர் அவருக்கு அளித்திருப்பார்? அது மட்டுமா? 'நடிக மணி' என்ற ஒரு பட்டம் வேறு அவருக்கு ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரால் கொடுக்கப் பட்டிருக்கிறது.

* * *

'நடிக மணி' என்ற பட்டப் பெயரைத் தாங்கிய இன்னொரு நடிகரும் இருக்கிறார். அவர் எஸ். வி. சகஸ்ர நாமம்.

நாடகக் கம்பெனியின் உரிமையாளரும், நடிகருமான டி. எஸ். ராஜ மாணிக்கத்தின் பட்டப் பெயர்களைக் கொஞ்சம் மூச்சைப் பிடித்துக் கொண்டே படியுங்கள்: 'நாடகக் கலை அரசு', 'நாடகக் கலாநிதி', 'நாடகக் கேசரி', 'சுதந்திர நாடக மணி' 'நவாப்' ராஜ மாணிக்கம். அப்பாடா!

* * *

இந்த 'நவாப்' பட்டத்திற்கும் இரண்டு போட்டிதாரர்கள். ஜெமினி நடிகர் எம். கே. ராதாவுக்கும் 'நவாப்' பட்டம் உண்டு.

* * *

'திரைப் பட மோஹினி' என்ற பட்டத்தை எந்த நடிகைக்குக் கொடுக்கலாம்? இப்படி ரஸிகர்களை

ஒரு கேள்வி கேட்டால், டி. ஆர். ராஜ குமாரியில் ஆரம்பித்து பி. ஆர். மங்களம் வரை உள்ள பல நடிகைகளில், ரஸிகர்கள் அவரவர்களுடைய அபிமான நக்ஷத்திரத்திற்கு இந்தப் பட்டப் பெயரை அளிக்க ஆசைப்படுவார்கள்.

* * *

புதிதாக ஆரம்பித்த சினிமாப் பத்திரிகை ஒன்றில், வி. என். ஜானகியின் வாழ்க்கையை எழுதியிருக்கும் அதன் ஆசிரியர் 'திரைப்பட மோஹினி ஜானகி' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறார்.

* * *

மின்மினி படம் அறிவிக்கப்படுவதற்கு முன்பாக **கங்கணம்** படத்தில் நடித்து வரும்போதே நடிகை மேனகா, 'மின்மினி' மேனகாவாக ஆகிவிட்டார். இதுவும் ஒரு பத்திரிகை ஆசிரியரின் கைங்கர்யம்தான்.

* * *

ஆந்திர நடிகை பானுமதி எவ்வளவோ படங்களில் எவ்வளவோ பாட்டுகள் பாடியிருக்கிறார். ஆனால் **ஸ்வர்க்கஸீமாவில்** அவர் பாடிய 'பாவுறமா' என்ற பாட்டின் மதிப்பே அலாதிதான். அதுவே அவருக்குப் பட்டப் பெயராகி விட்டதல்லவா?

* * *

திரையில் தமது நடனத்தின் மூலம் நக்ஷத்திரப் பதவியைப் பெற்றவர் குமாரி கமலா. ஆகவே 'நடன குமாரி' என்பது அவருக்கு மிகவும் பொருத்தமான பட்டம்தானே?

* * *

பல உயர்ந்த கவிதைகள் புனைந்திருப்பவரும், சில படங்களை டைரெக்ட் செய்திருப்பவருமான ச. து. சு. யோகியாருக்கு 'பால பாரதி' என்ற பட்டம் தகுதியானது என்பதை, அவருடைய கவிதைகளைப் படித்து ரஸித்தவர்கள் ஒப்புக் கொள்வார்கள்.

* * *

ஏ. என். பெரிய நாயகி நடித்தது **சண்பகவல்லி** என்ற ஒரே ஒரு படத்தில்தான் என்றாலும், நாட்டியக் கலையில் அவருக்கு நல்ல பெயரும், புகழும் உண்டு. அதற்கு அத்தாக்ஷி 'நடன கலாமணி' என்ற அவரது பட்டப் பெயர்தான்.

* * *

யூ. ஆர். ஜீவரத்தினத்திற்குக் கிடைத்த புகழெல்லாம் அவருடைய இன்னிசையினால் ஏற்பட்டது தான் என்பதை எடுத்துக் காட்டுவது போல் இருக்கிறது 'இசைக் குயில்', 'இசைவாணி' என்ற அவரது பட்டப் பெயர்கள்.

சூபர் பிக்சர்ஸாரின் "இன்பவல்லி"யில் இன்பமூட்டும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார் என். எஸ். கிருஷ்ணன்.

டைகர் வரதாச்சாரி போன்ற சங்கி தப் புலிகள் பலர் பார்த்து ஒரு வருக்கு "கான சரஸ்வதி' என்று பட்டம் கொடுக்க வேண்டுமென்றால், அது தகுதியானவருக்குத் தான் கொடுக்கப் பட்டிருக்கும் என்பதில் சந்தேக மென்ன? அந்த பாக்கியம் கிடைத்திருப்பது டி. கே. பட்டம் மாளுக்குத் தான்!

* * *

'ராஜ பாவை' என்பது நடிகை ரஜனிக்குள்ள 'பட்டம்' என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா? 'கட்டழகி' ரஜனி என்று கூட, நடிகையின் அபிமான பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அவரை வர்ணிக்கிறார். இதைத் தடுக்க யாரால் முடியும்?

* * *

சில படங்களில் நாட்டியம் ஆடிவிட்டு, தற்போது டில்லியில் நாட்டிய சேவை செய்து வரும் கோபால கிருஷ்ண, ரமணி ஆகியோரது பெயர்களுடன் முறையே "நிருத்ய சாம்ராட்", "நடன ராணி" ஆகிய பட்டங்கள் காணப்படுகின்றன!

* * *

அடிதடிப் படங்கள் என்றால் சட்டென்று டி. எஸ். மணி என்ற நடிகரின் நினைவு தான் யாவர் மனதிலும் தோன்றும். ஆகவே 'பாட்லிங் மணி' என்று அவர் அழைக்கப் படுவதில் வியப்பு ஒன்று மில்லை.

* * *

குயிலின் தோற்றத்தை யாருமே விரும்புவதில்லை. அதன் குரல் இனிமையைத் தான் ரஸிக்கிறார்கள். அந்த வகையில் நாம் பார்க்கும் போது பி. ஏ. பெரிய நாயகியை, 'இசைக் குயில்' என்று அழைப்பது நூற்றுக்கு நூறு பொருத்தமானது என்று கூறத் தோன்றுகிறது.

* * *

உலக பந்தங்களையே துறந்த ஞானி போன்ற உருவத் தோற்றமும். நடை உடை, பாவனைகளும் அமையப் பெற்றவர் கே. பி. சுந்தராம்பாள். ஆனால் அவரையும், தருமபுர ஆதீன கர்த்தா அளித்த 'ஏழிசை வல்லபி' என்ற பட்டம் பற்றிக் கொண்டு தான் இருக்கிறது.

* * *

இன்று நக்ஷத்திரங்களாகப் பிரகாசிக்கும் பல நடிகைகள், அந்த நிலைக்கு வரக் காரணமாயிருந்தவர் டைரெக்டர் கே. சுப்ரமண்யம் என்பது யாரும், மறுக்க முடியாத உண்மை. ஆகவே அவருக்கு "நக்ஷத்திர பிரம்மா" என்ற பட்டம் அளித்தால் மிகமிகப் பொருந்தும்.

* * *

ஒரு புலியின் முன்னிலையில் ஒருவருக்கு 'சிம்மம்' என்ற பட்டம் சூட்டும் விழா நடை பெற்றால் எப்படி இருக்கும் என்பதை நான் நேரில் பார்த்தேன்! பிரமிக்காதீர்கள்! பிரபல நட்டுவனரான வழுவூர் ராமையா பிள்ளைக்கு 'நாட்டிய கலா கேசரி' என்ற பட்டம், டைகர் வரதாச்சாரியார் முன்னிலையில் அளிக்கப்பட்ட வைபவத்தைத்தான் நான் குறிப்பிடுகிறேன்.

* * *

ரொம்ப சரி; இந்தப் பட்டங்கள் எல்லாம் யாரோ கொடுத்தார்கள், அல்லது எப்படியோ ஏற்பட்டது. ஆனால் இவைகள் அவரவர்களுக்குத் தகுதிதானா என்றுதானே கேட்கிறீர்கள்? அதெல்லாம் வேறு விஷயம்!

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆனார்கள். அவர் காலத்தில், அவர் மூலம்தான் இந்தக் குடும்பம் ஹிந்து மதத்தை விட்டு, கதோலிக்க கிறிஸ்தவ மதத்தைத் தழுவியது.

ஸ்ரீ. மாணிக்க முதலியாரைப் போலவே அவரது புத்திரர் ஸ்ரீ. ராஜ மாணிக்க முதலியாரும் சங்கீதத்தில் பெரிய வித்வான் ஆனார். ஆனால் அவர் வீணைக்குப் பதில் பிடிலைக் கைக் கொண்டார். அவரிடம் பிரபல பிடில் வித்வான் மைசூர் சௌடய்யா கூட கொஞ்ச காலம் சிக்ஷை சொல்லிக் கொண்டாராம். தற்போது திருச்சி ரேடியோவில்கச்சேரி செய்து வரும் வீணை கனகாம்பாளும் மாதுரி தேவியின் உறவினர்தானாம்.

'மிலிட்டரி' மாணிக்க முதலியாரின் புத்திரியான மனோரஞ்சிதம் அம்மாளை சுங்க வரி இலாகாவில் உத்தியோகம் பார்த்துவந்த ஸ்ரீ. சூசை முதலியார் மணந்து கொண்டார். இவர்களுக்கு மூன்று ஆணும், மூன்று பெண்ணும் பிறந்தனர். அவர்களுள் கடைசியாக (1927-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில்) பிறந்தவர்தான் மாதுரி தேவி.

மாதுரி தேவிக்கு பெற்றோர்கள் இட்ட பெயர் **கிளாரா**. அவர் சினிமாவுக்கு வந்ததும் தம் பெயரை "எம். எஸ். சந்திரா" என்று மாற்றிக் கொண்டு **பாண்டுரங்கா, வாயாடி** ஆகிய இரு படங்களில் நடித்தார். ஆனால் இந்தப் பெயர் அதிர்ஷ்டவசமாக அமையாததால்... ஆகிவராததால் தான் அவர் சினிமாவிலிருந்து சில வருஷங்கள் விலகியிருக்க வேண்டியதாயிற்று — என்று [illegible] என்னவோ, அவர் மீண்டும் படங்களில் நடிக்க வந்ததும், "மாதுரி தேவி" என்ற புதுப் பெயரை வைத்துக் கொண்டு நடித்து வருகிறார்.

மாதுரியின் சொந்த ஊர்(சென்னை) ராயபுரம். அவர் அங்குள்ள ஸெய்ன்ட் ஆன்டனீஸ் ஹைஸ்கூலில் சேர்க்கப்பட்டார். இரண்டாவது பாரத்தில் 'பாஸ்' ஆனதும் அவர் படிப்பை நிறுத்திக் கொண்டார். அவருடைய பாட்டனாரும், தாய் மாமனும் சங்கீத வித்வான்களாக விளங்கியதால் குடும்பத்தில் எல்லோருமே சாதாரணமாகப் பாடும் திறமை பெற்றிருந்தனர். மாதுரிக்கு இனிய குரல் இருப்பதைக் கண்ட அவரது பெற்றோர்கள், அவருக்கு பிரபலஸ்ரீ. ச. சு. சங்கரலிங்க நாடாரின் மருமகன் ஸ்ரீ. ரத்னவேல் நாடாரிடம் சங்கீத சிக்ஷை சொல்லிக் கொள்ள ஏற்பாடு செய்தனர். கொஞ்சகால ஆரம்ப சிக்ஷைக்குப் பிறகு மாதுரி பிரபல பாடகி என். ஸி. வஸந்த கோகிலத்தினிடம் சங்கீதம் கற்க ஆரம்பித்தார். அந்த சமயத்தில் மாதுரி பல தடவை வஸந்த கோகிலத்தின் கச்சேரிகளில் தம்புரா மீட்டியிருக்கிறார்.

"பொன்முடி"யில் மாதுரி

மாதுரிக்கு சிறு வயதிலேயே சங்கீதத்தில் மட்டுமன்றி நாடகங்களில் நடிப்பதிலும் மிகுந்த பிரியம் இருந்து வந்தது. பள்ளிக்கூட நாடகங்கள் ஒன்றிலாவது அவர் பங்கெடுத்துக்

காள்ளாமலிருக்க மாட்டார். அவருக்கு ஆண் வேஷங்களில் நடிப்பது படங்களில்தான் முதல் அநுபவம் என்று நினைக்க வேண்டாம். பள்ளி நாடகங்களில் அவர் பெரும்பாலும் ஆண் வேஷங்களிலேதான் நடிப்பது வழக்கமாம். ஒரு முறை அவர் ஒரு கிறிஸ்தவ மத நாடகத்தில் நடித்த போது, அதற்கு தலைமை வகித்த பிஷப் தாமஸ் அவர்கள் அவரது நடிப்பைப் பாராட்டி ஐந்து, ரூபாய் களைப் பரிசாக அளித்தாராம்.

வாயாடிக்குப் பிறகு மாதுரியின் மனக் கோட்டைகள் பெற்றோர்களால் தகர்க்கப்பட்டதால் அவர் மனம் உடைந்துபோனார். ஆனால் எப்படியும் என்றைக்காவது ஒரு பிரபல நக்ஷத்திரம் ஆகிவிட வேண்டும் என்ற எண்ணம் மட்டும் அவர் மனதை விட்டகலவேயில்லை; வேறுவழியில்லாததால், அவர் சங்கீதத்தை விருத்தி செய்து கொள்ளுவதிலும், நாட்டியம் பயிலுவதிலும், தமிழ்ப் புத்தகங்களைப் படிப்பதிலுமாக தம காலத்தைப் போக்கி வந்தார்.

இப்படியாக ஐந்து வருஷங்கள் கழிந்தன. இதற்குள் மாதுரியின் குடும்பத்தில் அவரது எதிர்கால வாழ்க்கையை பாதிக்கும் அநேக சம்பவங்கள் நிகழ்ந்தன. "சினிமாவில் நடிக்கக் கூடாதென்று" அவரது பெற்றோர்கள் விதித்திருந்த தடையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்ந்து வந்தது. இந்த சமயத்தில்—1945-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில்—மாதுரி ஒரு கிறிஸ்தவ அன்பரை மணந்து கொண்டார். மாதுரி சினிமாவில் நடிப்பதை அவரது கணவர் ஆதரிக்கவே, அவர் தம் பெற்றோர்களின் தடையை மீறி நடிக்கவும் தைரியம் கொண்டார். இந்த சம்பவங்கள் அவரது குடும்பத்தில் ஒரு பூகம்பத்தை உண்டுபண்ணி விட்டது. பெற்றோருக்கும் அவருக்கும் மனஸ்தாபம்கூட ஏற்பட்டது. ஆனால் மாதுரி தயங்கவில்லை; தம் நெடுநாளைய மனக்கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு ஆயத்தமானார்.

இந்த சமயத்தில், மாதுரி சங்கீத வித்வான் யானை வைத்தியநாதய்யரிடம் சிக்ஷை சொல்லிக் கொள்ள ஆரம்பித்திருந்தார். ஒரு நாள் அவரையும் அழைத்துக் கொண்டு மாதுரி, ஸ்ரீ. வைரம் அருணாசலம் செட்டியார் சென்னையில் நடத்திவந்த **திருமழிசை ஆழ்வார்** நாடகத்தைப் பார்க்கச் சென்றார். அங்கு அவர் கலை டைரெக்டர் டி. வி. சாரி தற்செயலாய் சந்தித்தார். அவர் மாதுரியைச் சேலம் மீனாக்ஷி பிலிம்ஸாரிடம் சிபாரிசு செய்தார். **லக்ஷ்மி விஜயம்** படத்தில் மாதுரிக்கு நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அப் படத்தில் மாதுரி அமுதா, குமுதா என்ற இரு சகோதரிகளின் வேஷங்களில் நடித்திருக்கிறார். "சந்திரா" என்ற பெயரை அவர் உதறி விட்டு, "மாதுரி தேவி" யாக ஆனது இந்தப் படத்தில்தான். அது முதல் மாதுரியின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகி விட்டது என்று சொல்ல வேண்டும்.

லக்ஷ்மி விஜயத்தில் மாதுரி திறம்பட நடித்திருநதார். இதைப் பார்த்த ரஸிகர்கள், "இது யாரப்பா, இந்தப் புதிய நடிகை? ரொம்ப நன்றாய் நடிக்கிறாளே!" என்று ஆச்சரியம் அடைந்தனர். ஆனால் என்னைப் போன்ற சில சினிமா உலக ஜாம்பவான்களுக்கு மட்டும் சந்தேகம் ஏற்பட்டது: "இவரைப் பார்த்தால் எம். எஸ். சுந்தரா மாதிரி இருக்கிறதே" என்று. பிறகு விசாரித்ததில் சந்தேகம் நீங்கியது.

லக்ஷ்மி விஜயத்தில் நடித்துக் கொண்டிருந்த போதே அவரது நடிப்புத் திறமையை மாடர்ன் தியேட்டர்ஸார் கவனித்தனர். தங்கள் **ஆயிரம் தலை வாங்கி அபூர்வ சிந்தாமணி**யில் நடிப்பதற்கு மாதுரியை ஒப்பந்தம் செய்து கொண்டனர். அப் படத்தில் மாதுரி பஞ்ச வஞ்சியரை மணப்பதாக அழைத்துச் செல்லும் தம்பதியாக ஆண் வேஷத்தில் நடித்திருக்கிறார்.

இதன் பின்னர் ஜூபிடர் பிக்சர்ஸார் மாதுரியை இரண்டு படங்களுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர். **மோஹினி**யில் அவர் முந்தின இரு படங்களைவிட ரஸிகர்களின் மனதை



அதிகம் கவர்ந்தார். சமீபத்தில் வெளி வந்திருக்கும் ஜுபிடரின் **கன்னியின் காதலி** படத்தில் சந்திரிகா, கலைமணி, ஆதித்தன் ஆகிய மூன்று வேஷங்களில் மாதுரி நடித்திருக்கிறார். முக்கியமாக கலைமணி என்ற ஆண் வேஷத்தில் அவர் தோன்றுகையில் அவரது நடிப்புத் திறமை நன்கு வெளியாகிறது

மாதுரி தற்போது மாடர்ன் தியேட்டர்ஸாரின் **பொன் முடி** தமிழ்ப் படத்தில் நடித்து வருகிறார். அடுத்தாற்போல் ஜுபிடர் தயாரிக்கப் போகும் **மனிதன்** படத்திலும் மாதுரி நடிக்கக் கூடும் என்று தெரிகிறது.

மாதுரிக்கு இனிய சாரீரமும், சுயமாகப் பாடும் திறமையும் இருக்கிறது. **பாண்டுரங்கா, வாயாடி,** ஆகிய இரண்டு படங்களில் அவர் சொந்தக் குரலிலேயே பாடியிருக்கிறார். எனினும், யாது காரணத்தாலோ மற்ற படங்களில் அவருக்கு குரல் இரவல் வாங்கப்பட்டிருக்கிறது. **லக்ஷ்மி விஜய**த்தில் பழனி பாகிரதியின் குரலும், **மோஹினி, கன்னியின் காதலி** ஆகிய படங்களில் கே. வி. ஜானகியின் குரலும் மாதுரிக்காக இரவல் வாங்கப்பட்டுள்ளன. இப்பொழுது **பொன் முடி**யிலோ அவருக்காக குமாரி ரத்தினம் பாடி வருகிறாராம்.

ஹாஸ்ய பாகத்தில் அவர் முன்பு நடித்து நல்ல புகழ் பெற்றிருந்தாலும் மாதுரிக்கு ஹாஸ்ய பாகத்தில் நடிக்க இஷ்டமில்லையாம். சோகம், வீரம் இவை மிகுந்த பாத்திரங்களையே தாம் மிக விருப்புவதாக அவர் கூறுகிறார்.

சுமார் ஐந்தடி உயரமும், நல்ல முக அழகும், மாநிறமும் உடைய மாதுரி தேவியிடம் பவ்ய குணமும் காணப்படுகிறது. படாடோப மற்ற முறையில் அவர் வாழ்க்கை நடத்தி வருகிறார். பேச்சை ரஸிக்கவும், ரஸமாகப் பேசவும் அவருக்குத் தெரிந்துள்ளது. பிரமாதமாக நடித்து, ஏராளமான புகழைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டும் என்ற துடிதுடிப்பு அவரிடம் காணப்படுகிறது. இந்த லக்ஷ்யத்தில் அவர் வெற்றி பெறுவார் என்றே நான் நினைக்கிறேன்.

மருத நாட்டு

இளவரசி

திரைக்கதை



கோபதிவர்மன் குறிஞ்சி நாட்டை ஆண்டுவந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள். மூத்த மனைவியான சித்திராதேவிமீது மன்னனுக்கு அளவு கடந்த காதல்.

இளைய மனைவிக்கு துர்ஜயன் என்று ஒரு சகோதரன். அவன் கோபதிவர்மனுக்கு மந்திரியாக இருக்கிறான். துர்ஜயன் கபட நெஞ்சன். எப்பொழுதும் தன் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்வதிலேயே எண்ணும் கருத்துமாய் இருப்பவன்.

ராணிகள் இருவரும் ஏக காலத்தில் கர்ப்பம் தரிக்கின்றனர். துர்ஜயனுக்குத் தன் சகோதரி கர்ப்பம் தரித்திருப்பது சந்தோஷமாக இருந்த போதிலும், சித்திராதேவியும் கர்ப்பம் தரித்தது தான் பிடிக்கவில்லை. சித்திராதேவிக்குக் குழந்தை பிறந்து விட்டால் அது தன் பட்டத்திற்கு வாரிசாகி விடும். பிறகு எதற்கும் தானே கைகட்டி பதில் சொல்ல வேண்டும் என்று துர்ஜயன் எண்ணுகிறான். அதனால் தன் செல்வாக்குப் போய்விடுமே என்று அஞ்சுகிறான். அதற்காக தன் சகோதரியுடன் கூடிப்

பேசுகிறான். அச்சமயத்தில் துர்ஜயனுக்கு காளிங்கன் என்ற ஒரு துரோகி துணைபுரிகிறான். அவனும் அவர்கள் சதியில் பங்கெடுத்துக் கொள்கிறான். மூவரும் கூடிப்பேசி, 'சித்திராதேவி இளைய ராணியின் மருந்தில் விஷம் கலந்து கொடுத்தாள்' என்று அரசனிடம் புகார் செய்கின்றனர். கோபதிவர்மனும் இதை நம்புகிறான். ஆனால் துர்ஜயன் எதிர் பார்த்த அளவு சித்திரா தேவிக்குத் தண்டனை கிடைக்கவில்லை. அதனால் மஹாராணியைக் கொலை செய்வதற்கு ஏற்பாடு செய்கிறான். துர்ஜயனின் கருத்தை மந்திரி அன்பானந்தர் அறிந்து விடுகிறார். அவர் மஹாராணி சித்திராதேவியைக் காப்பாற்றி வெளியேறச் செய்கிறார். அன்பானந்தர் மஹாராணியை வெளியேற்றும் சமயம் துர்ஜயன் தன் கட்டாரியை மஹாராணி மீது வீசுகிறான். ஆனால் அதிர்ஷ்ட வசமாக கட்டாரி மஹாராணி மீது படாமல் அன்பானந்தரின் மீது பாய்கிறது. அன்பானந்தர் தம் கடமையைச் செய்த சந்தோஷத்துடன் உயிர் துறக்கிறார்.

அரண்மனையை விட்டு வெளியேறிய சித்திராதேவி தம் சித்தம் போனபடியெல்லாம் நடக்கிறாள். திடீரென்று காட்டுமிராண்டிக் கூட்டம் ஒன்று அவளைச் சூழ்ந்து கொள்கிறது. காட்டுமிராண்டிகளின் தெய்வத்திற்கு ஒரு கர்ப்பவதியின் பலி வேண்டுமாம். அதற்காக அவர்கள் சித்திரா தேவியை அழைத்துச் சென்று பலியிட ஆயத்தம் செய்கின்றனர். அச்சமயம் கார்மேகம் என்ற இடையன் அவளைக் காப்பாற்றுகிறான். அவனுடைய குடிசைக்கே சித்திராதேவி அழைத்துச் செல்லப்படுகிறாள். அங்குதான் குறிஞ்சி நாட்டின் உண்மையான இளவரசன் பிறக்கிறான்.



குழந்தை பிறந்த சில நாட்களுக்குப் பிறகு சித்திராதேவி குழந்தையை கார்மேகத்திடம் கொடுத்து விட்டு, ஆண்கள் புகக் கூடாது என்ற கட்டுப்பாடு உள்ள காளி கோயிலுக்குச் சென்று வசிக்கலானாள்.

கட்டாரிக்கு இறையான அன்பானந்தரை துர்ஜயன் யாருக்கும் தெரியாமல் மறைத்து விடுகிறான். அரண்மனையை விட்டு வெளியேறிய மஹாராணி சித்திரா தேவிக்கும் அன்பானந்தருக்குமாக ஒன்று சேர்த்து துர்ஜயன் கெட்ட விதமாக பிரசாரம் செய்கிறான். முதலில் காணாமல் போன சித்திராதேவியைத் தேட ஆட்களை அனுப்பிய மன்னன் கோபதிவர்மன், துர்ஜயனின் சொல்லால் அவர்களைத் திரும்பச் செய்கிறான்

அரண்மனையில் இளைய ராணி பிரசவிக்கிறாள். ஆனால், குழந்தை பிறக்கும் போதே இறந்து விடுகிறது. இதை இரகசியமாக அறிந்த துர்ஜயன் அதற்கு ஒரு சூழ்ச்சி செய்கிறான் காளிங்கனுடைய குழந்தையை இளைய ராணியின் குழந்தையாக்கி விடுகிறான். தன் தங்கையின் மகனைக் கொன்று தானே செல்வாக்குப் பெறவேண்டும் என்பது துர்ஜயனின் எண்ணம். இளைய ராணியின் குழந்தைக்கு ரௌத்திரன் என்று பெயரிடுகின்றனர்.

ரௌத்திரன் மஹா முரடனாக வளர்கிறான். அவனிடம் எல்லா விதமான கெட்ட குணங்களும் அமைந்திருந்தன. கன்னியர் வேட்டை அவனுடைய துர்குணங்களின் சிகரமானது ஒரு சமயம் அவன் காளிங்கன் மகள் முத்தம்மாளை கண்டுவிடுகிறான். உடனே அவளை அடைய நெருங்குகிறான். பயந்து ஓடுபவளை பலவந்தமாகப் பற்றி, தன் துராக்கிரகச் செயலைப் புரியத் துணிகிறான். அச்சமயம் காண்டிபன் என்ற வாலிபனும், அவனுடைய நண்பன் அழகும் அங்கு வந்து, முத்தம்மாளைக் காப்பாற்றி ரௌத்திரனை நன்றாக அடித்துப் போட்டு விட்டுச் செல்கின்றனர். ரௌத்திரனின் கோபத்தால் பின்பு என்ன நடக்கும் என்பது காண்டிபனுக்கும் அழகுக்கும் தெரியுமாதலால் இருவரும் அவ்வூரை விட்டோடி விடுகின்றனர்.

காளிங்கன் முத்தம்மாள் மூலம் ரௌத்திரனின் செய்கையை

அறிந்து ஆத்திரம் அடைகிறான். ரௌத்திரனின் கொட்டத்தை அடக்க வேண்டும் என்று அவன் திட்டமிடும் சமயம் அவன் கைது செய்யப்படுகிறான். இதனால் காளிங்கன் மிதியுண்ட நாகம் போல் சீறுகிறான்.

காளிங்கன் ரௌத்திரனால் கைது செய்யப்பட்ட விபரம் துர்ஜயனுக்குத் எட்டுகிறது. தன் ரகசியம் எங்கே வெளியாகிவிடுமோ என்ற பயத்தில் அவன் ஓடோடியும் வந்து, காளிங்கனைச் சிறையிலிருந்து விடுவிக்கிறான். பிறகு, நடந்தவைகளை மறந்து, பயங்கரமான ரகசியத்தைக் காப்பாற்றும்படி வேண்டிக் கொள்ளுகிறான் துர்ஜயன்.

குறிஞ்சி நாட்டை விட்டு ஓடிய காண்டிபனும், அழகும் மருத நாட்டை அடைகின்றனர். அவ்வூரினுள் செல்லும் போது இரு கிராமப் பெண்களை அவர்கள் சந்திக்கின்றனர். அப்பெண்களில் ஒருத்தி இளவரசி, மற்றொருத்தி அவளுடைய தோழி ரம்பா. இளவரசி கிராம மக்களோடு பழகவே அவர்கள் அப்படி மாறு வேஷத்தில் வந்திருந்தனர். இச்செய்தி காண்டிபனுக்கும், அழகுக்கும் தெரியாது.

இளவரசிக்கும் காண்டிபனுக்கும் எதிர்பாராத விதமாகப் பலமுறை சந்திப்பு ஏற்படுகிறது. அதன் பயனாக அவர்களிடையேகாதலும் ஏற்படுகிறது.

குறிஞ்சி நாட்டிலிருந்து ரௌத்திரனுக்குப் பெண் கேட்க துர்ஜயன் மருத நாட்டிற்கு வருகிறான். இளவரசி துர்ஜயனை அவமானப் படுத்தி அனுப்பி விடுகிறாள்.

அவமானம் அடைந்த துர்ஜயன் ஊர் திரும்பியதும் சேனைகளைச் சேகரித்துக் கொண்டு மருத நாட்டின் மீது படையெடுக்கிறான். குறிஞ்சியின் பலமான படையின் முன் மருத நாட்டு மன்னன் மணிபல்லவன் சரணடைய வேண்டியதாகிறது உடனே மணிபல்லவனும் இள



வரசியும் கைது செய்யப்பட்டு காராக்கிரகத்தில் அடைக்கப்படுகின்றனர். காண்டிபன் இளவரசியுடன் பழகிய காலத்தில் அவள் அரண்மனை வேலைக்காரி என்று தன்னைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அதன் காரணமாக மருத நாடு எதிரிக்குப் பணிந்ததால், தன் காதலியை அரண்மனையிலிருந்து காப்பாற்றவேண்டும் என்று எண்ணி காண்டிபன் அங்கு வருகிறான். அவன் தேடிய பெண் மருத நாட்டு இளவரசியாக அங்கு இருப்பதைக் கண்டு மனமுடைந்து வெளியேறுகிறான். அரண்மனை, அரசபோகம், இவை மீதெல்லாம் காண்டிபனுக்கு அவ்வளவு வெறுப்பு!

இளவரசியை அழைத்துக் கொண்டு துர்ஜயன் குறிஞ்சி நாட்டிற்குப் போகிறான்.

மனமுடைந்து வெளியேறிய காண்டிபன் மனம் சஞ்சலத்திலாழ்ந்தது. அவனுடைய காதல் அவனை வாட்டியது. காதலுக்கு இளவரசியானால் என்ன? எளிய குடும்பத்தினள் ஆனால் என்ன? காண்டிபன் மனம் மாறுகிறது இளவரசியை துர்ஜயன் அழைத்துச்செல்வதைப் பார்த்து, பின்தொடர்கிறான், வழியில் துர்ஜயன் கூடாரம் அடித்துத் தங்குகிறான். அச்சமயம் படைபலத்தையும் பொருட்படுத்தாது காண்டிபன் இளவரசி இருக்கும கூடாரத்தை அடைந்து அவளைக் காப்பாற்றிக்கொண்டு ஓடும் சமயம் காவலர்கள் துரத்துகிறார்கள். அவர்கள் தப்பிப் போகும் சமயம் ஒரு ஆற்றில் விழுந்து விடுகிறார்கள. ஆற்றில் இருவருமாக நீந்திக் கொண்டே குறிஞ்சி நாட்டை அடைகின்றனர். கரையை அடைந்ததும் இருவரும் மயக்கமுறுகின்றனர். அப்போது அங்கு தற்செயலாய் வந்த காளிங்கன் அவர்களைக் காப்பாற்றி, தன் வீட்டிற்கு அழைத்துச் செல்கிறான்.

இளவரசி தப்பிய செய்தி கேட்டு துர்ஜயன் கோபமடைகிறான். அவன் இளவரசியைக் கண்டு பிடிப்பதற்காக ஆட்களை நாலா பக்கத்திலும் அனுப்பிவிட்டு, குறிஞ்சி நாட்டுக்குத் திரும்புகிறான். நாட்டை அடைந்ததுமே அவன் விஷக் கண்களுக்கு காண்டிபன், இளவரசி இருவரும இருக்குமிடம் தெரிந்துவிடுகிறது. அவன் காளிங்கன் வீட்டை அடைந்து இளவரசியையும் காண்டிபனையும் கைது செய்ய முற்படுகிறான். அவர்கள் இருவரும் துர்ஜயன் வலையிலிருந்து தப்பி ஓடுகின்றனர். துர்ஜயன் ஆட்களுடன் பின் தொடருகிறான். இளவரசி அவனை அறியாது ஆண்கள் புகக் கூடாத காளி கோயிலுக்குள் நுழைந்து விடுகிறாள். காண்டிபன் நாலா பக்கங்களிலும் வந்த படை வீரர்களால் கைது செய்யப்படுகிறான்.

கைது செய்யப்பட்ட காண்டிபன் ரௌத்திரனைக் கொலை செய்ய முற்பட்டதாக, துர்ஜயனால் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுகிறான்.

காண்டிபனுடைய தண்டனை நிறைவேற்றப்படுவதற்குள் துர்ஜயன் ஆண்கள் புகக் கூடாத காளி கோயிலுக்கு இளவரசியைக் காணச் செல்கிறான். அச்சமயம் பழி தீர்க்கக் காத்துக்கொண்டிருந்த முத்தம்மாள் அவனைப் பின்தொடருகிறாள். தன் கட்டாரியால் அவன் துர்ஜயனைக் கொன்று விடுகிறாள்.

அத்தனை காலமும் கண்மூடித்தனமாய் காரியங்களைச் செய்து வந்த காளிங்கன் சுயபுத்தியைப் பெறுகிறான். அவ்வளவு காலம் தான் செய்த தவறுகளை உணர்ந்து, மன்னன் கோபதிவர்மனிடம் துர்ஜயனின் ரகசியம் பூராவையும் சொல்லிவிடுகிறான். சித்திராதேவி உயிருடன் இருப்பதும் மன்னனுக்குத் தெரிகிறது. அவள்மீது துர்ஜயன் கூறியவைகள் பொய் என்பதை காளிங்கன் வாயிலாக மன்னன் அறிகிறார்.

காளி கோயிலில் மறைந்திருந்த சித்திராதேவிக்கு காண்டிபனே தன் மகன் என்பது தெரிகிறது. உடனே அவள் காண்டிபனை மரண தண்டனையிலிருந்து காப்பாற்ற ஓடி வருகிறாள்.

மரண தண்டனைக்குக் காத்திருந்த காண்டிபன் காப்பாற்றப்படுகிறான். மன்னன் காண்டிபனைத் தன் மகன் என்று அறிந்ததும் அளவிலா மகிழ்ச்சி அடைகிறான்.

இளவரசிக்கும் காண்டிபனுக்கும் திருமணம் நடைபெறுகிறது. பிறகு மன்னன் கோபதி வர்மன் தான் தள்ளாத வயதை அடைந்து விட்டதால் குறிஞ்சி நாட்டை காண்டிபனுக்குப் பட்டம் கட்ட ஏற்பாடு செய்கிறான். முடிசூட்டும் சமயத்தில் காண்டிபன் மகுடத்தைக் கரத்தில் பெற்று, "காலம் மாறி விட்டதால், இனி முடியாட்சி கூடாது; குடியாட்சியே வேண்டும்" என்று குடிகளிடம் ஆட்சியை ஒப்படைக்கிறான்.

இருவர்

சென்ற மாதம் 24-ம் தேதி, 'இளைஞர் கலைக் கழக' அங்கத்தினர்களின் "இருவர்" என்ற சரித்திரக் கற்பனை நாடகம் சென்னை, வி. பி. ஹாலில் நடைபெற்றது.

பணமும் புகழும்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

இப்படி நான் தீர்மானித்துக் கொண்டிருந்தபோது வண்டி நின்றிருந்தது.

"ஏண்டா! வண்டியை விட்டு இறங்க மனமில்லையா?" என்று என் நண்பன் கேட்டபோதுதான் எனக்கு உணர்வு வந்தது. அதற்குள் ஏதேதோ சிந்தனைகள். வண்டியை விட்டு இறங்கினேன்.

2

சாயங்காலமான பிறகு புஷ்பாவின் வீட்டை நோக்கிக் கிளம்பினேன். அரண்மனைபோலிருந்த அவன் வீட்டை நான் அடைந்தபோது அதன் வாயில் முகப்பில் யாரையும் காணோம். "புஷ்பா ராணி" என்று விலாஸமிட்டிருந்த பித்தளைத் தகடு, நன்றாகத் தேய்க்கப்பட்டிருந்த காரணத்தினால் பளபளத்தது. 'யாரைக் கூப்பிடுவது? எப்படிக் கூப்பிடுவது' என்று தயங்கித் தயங்கி நான் நின்றுகொண்டிருந்தபோது, ஒரு பெண்—வேலைக்காரப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்-வெளியில் வந்தாள்.

"புஷ்பா ராணி இருக்கிறார்களா?" என்று எனக்கே உரித்தான பணிவுக் குரலில் விசாரித்தேன்.

"இருக்காங்க! ஆனா யாரையும் பாக்க மாட்டாங்க!" என்று நறுக்குத் தெரித்தாற்போல் கூறினாள் அவள்.

அதற்குப் பயந்துவிடவில்லை நான். என்விலாஸம் அச்சடித்த கார்டு ஒன்றை அவளிடம் கொடுத்து,

"இதைக் கொண்டு போய், அம்மாவிடம் கொடு" என்றேன். அவள்போனாள். கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்தாள்.

"உங்களை உள்ளே வரச்சொல்றாங்க!" நான் எதிர்பார்த்த பதில்தான் இது.

உள்ளே புகுந்தேன்.

பிரம்மாண்டமான ஹால். அதில் பல சோபாக்களும் நாற்காலிகளும் நிறைந்திருந்தன. சுவரில் படங்கள். ஒருபக்கம் கண்ணோட்டத்தை விட்டேன். அந்தப் பக்கத்தில், கம்பீரமாக, சிரித்த முகத்துடன் இருந்த புஷ்பாராணியின் படம் பெரிதாக மாட்டப்பட்டிருந்தது. அதற்கு வலதுபுறத்தில் குமாரின் படம் மாட்டப்பட்டிருந்தது. இடதுபுறத்து படத்தில்சிரித்த முகத்தோடு இருந்த அந்த வாலிபன் யாரென்று எனக்குத் தெரியவில்லை. அழகாக இருந்தான். அவனைப் பற்றி யோசித்துக் கொண்டேயிருந்தேன்.

"ஓ! நமஸ்காரம்! வந்து ரொம்ப நேரமாகி விட்டாதா?" என்ற குரல் புஷ்பாவினுடையதாகத்தான் இருக்க வேண்டும் என்று திரும்பினேன். அவளே தான்.

"இல்லை— இப்போதுதான் வந்தேன்!" என்றேன். என்னைத் தெரிந்து கொண்டாள் புஷ்பா.

எதிரில் இருந்த சோபாவில் உட்கார்ந்தாள். அப்போதுதான் அவளை நான் நன்றாகக்கவனித்தேன். அவளது அழகு எல்லாம் போய்விடவில்லை, ஒரு காலத்தில் மிகுந்த அழகியாக இருந்தாள் என்பதற்குஅடையாளமாக அந்த அழகு அவளிடம் கொஞ்சம் இருந்து கொண்டுதான் இருந்தது.

"நான் இங்கே இருக்கிறேன் என்று உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்று அவள் முதலில் பேச்சை ஆரம்பித்தாள்.

இந்த கிராமத்தில் என் நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனைப் பார்க்க வந்தேன். அப்படியே உங்களையும் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது!"

"உங்கள் பத்திரிகை நன்றாக நடக்கிறதா?"

"நன்றாகத் தான் நடக்கிறது! நீங்கள் ஏன் இந்த கிராமத்தில் வந்து குடியேறி விட்டீர்கள்? திரைப்பட உலகத்தில் உங்களுக்கு இன்னும் நல்ல மதிப்பு இருக்கிறதே!" என்றேன்.

"உம்! படவுலகம் இனி எனக்குத் தேவையில்லை. பணத்திற்கும், புகழுக்கும் ஆசைப்படுகிறவர்களுக்குத் தானே அது வேண்டும். நான் விரும்பவில்லை அதை. நிம்மதியாக இங்கேயே இருந்து விடலாம் என்று நான் தீர்மானித்து விட்டேன்" என்றாள். அவளுடைய குரலில் விரக்தி தோய்ந்திருந்தது.

"நீங்கள் தனியாகவா இங்கு இருக்கிறீர்கள்?"

"இல்லை, வயதான என் தாயார் மட்டும் என் கூட இருக்கிறாள்" என்றாள்.

நான் அதற்கு மேல் சிறிது நேரம் பேசாமல் இருந்தேன். அவளும் பேசவில்லை. அதற்குள் வேலைக்காரி இரண்டு கோப்பைகளில் 'டீ' கொண்டு வந்து

வைத்தாள். 'டீ'யில் புகை கிளம்பிக் கொண்டிருந்தது.

"படவுலகத்தை விட்டு நீங்கள் ஏன் விலகினீர்கள்—என்பதை விவரமாகச் சொல்ல முடியுமா?" என்றேன்.

"பிடிக்கவில்லை—விலகி விட்டேன்!" என்றாள் சுருக்கமாக.

"பிடிக்கவில்லை யென்றால்............!"

"மனக்கஷ்டம்!"

"எதனால்?"......நான் விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தேன்.

அவள் எழுந்து உள்ளே போனாள் பதில் பேசாமல். இரண்டு கடிதங்களோடு திரும்பி வந்தாள்.

"இதைப் படியுங்கள் தெரியும்!" என்றாள்.

அவள் கண்களில் பிரதிபலித்த ஏக்கத்தை நான் எளிதில் புரிந்து கொண்டேன்.

முதல் கடிதத்தை எழுத்து விடாமல் படிக்க ஆரம்பித்தேன்:

"அன்புள்ள புஷ்பா,

'சில நாட்களாகவே ஏன் என்னிடமிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறீர்கள்?' என்று என்னிடம் அடிக்கடி கேட்டிருக்கிறாய் அல்லவா? அதற்குப் பதில் நேரிடையாக உன்னிடம் கூற என் நாவெழவில்லை. அதற்குக் காரணம நீ என்னிடம் சொரிந்த அன்பு தான். கடந்த இரண்டு வருஷ காலமாக நீயும் நானும் நெருங்கிப் பழகியிருக்கிறோம். சமூகத்திற்கு அஞ்சி கேட்போருக்கு, என்னை உன் கணவன் என்றேசொல்லி வந்தாய். அதில் என்ன சந்தேகம்? நான் உன் கழுத்தில் தாலிகட்ட வில்லையே தவிர மற்றபடி நான் உன் கணவனாகத்தான் இருந்தேன்.

நான் உன்னோடு பழகியதற்குக் காரணம்—இப்போது சொல்கிறேன்—உன் புகழ் தான். உன்னோடு சேர்ந்ததால் என் புகழ் அதிகமாகியது. நானும் பெயர் பெற்றிருந்தேன். அது உன் புகழுக்கு முன் கடுகளவு. ஆதலால் உன்னோடு சேர்ந்தேன்—முன்னேற. நீ இதை அறிந்து கொள்ளவில்லை. உன் அன்பை என் மேல் கொட்டினாய் நானோ காரியத்தில் கண்ணாய் இருந்தேன். உன்னால் புகழடைந்தேன். என் அபிலாஷை நிறைவேறியது.

சில நாட்களில் நீ சினிமா வானிலிருந்து மெதுவாகக் கீழிறங்கத் தொடங்கினாய். அந்த சமயத்தில் குமாரி வனஜா புகழ் பெற்றுக் கொண்டிருந்தாள். நான் உன்னுடனேயே இருந்து விட்டால், உன்னோடு என் புகழும் மங்கி விடும் என்று எனக்குத் தெரிந்தது. வனஜாவுடன் சேர்ந்து நடிக்க விரும்பினேன். அவளும் அதற்குச் சம்மதித்தாள்

இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தத்தில் கூட கையெழுத்து போட்டாகி விட்டது.

நான் புகழை விரும்புகிறேன். நீ பிரபல நக்ஷத்திரமாக இருந்த காலத்தில்—புகழ் பெறுவதற்காக உன்னுடன் சேர்ந்தேன். இப்போது அதே புகழுக்காகவே நான் குமாரி வனஜாவுடன் சேர்ந்திருக்கிறேன். நீ என்னிடம் காட்டிய அன்பிற்கு என் அனுதாபங்கள்.

இப்படிக்கு,
குமார்.

கடிதம் முடிந்தது. அதைக் கீழே வைத்து விட்டு இன்னொரு கடிதத்தை எடுத்தேன்.

எதிரில் புஷ்பாவைக் காணவில்லை. ஜன்னலோரத்தில் நின்று கொண்டிருந்தாள். அவளது கண்களிலிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது. குமார் அவளை ஏமாற்றி விட்டான் என்று நான் நினைத்தேன்.

இரண்டாவது கடிதம், "புஷ்பாவுக்கு" என்று மொட்டையாக ஆரம்பமாகியிருந்தது.

அதையும் படிக்க ஆரம்பித்தேன் :

"வறண்ட பாலைவனத்தைப் போலிருந்த என் வாழ்க்கையில் பசும் சோலையை உண்டாக்கியவை—உனது அன்பும், பணமும் தான்.

'நன்றாக ஆங்கிலம் போதிக்கக் கூடிய ஒரு ஆசிரியர் தேவை' என்ற உன் விளம்பரத்தைப் பார்த்த நான்—ஒரு விண்ணப்பம் போட்டு வைத்தேன். படித்து விட்டு வெட்டிப் பொழுதை வேலையில்லாமல் போக்குவதை விட இந்த வேலையையாவது செய்யலாம் என்று எண்ணினேன். கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை.

ஆனால் நான் எதிர்பார்க்காத விதமாக உடனே உன்னிடமிருந்து 'நேரில் வந்து பார்க்கவும்' என்று பதில் வந்தது. வெற்றி பெற்ற வீரன் போல் உன் வீட்டில் காலடி எடுத்து வைத்தேன். அந்த வேலை நல்ல வேலைதான்.

என்னைப் பார்த்ததும், நீ என்னைக் கேட்ட முதல் கேள்வி "உங்களுக்கு கல்யாணமாகி விட்டதா?" என்பதுதான்.

"இல்லை!" என்று நான்சொன்னேன்.

"எனக்குத் தான் ஆங்கிலம் சொல்லித் தரவேண்டும். நாளையிலிருந்து காலையிலும் மாலையிலும் வாருங்கள். சம்பளம் நூறு ரூபாய்" என்று நீ பேசிக் கொண்டே போனாய். நான் ஆச்சரியத்

உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணும உன்னத சித்திரம்

தால் ஸ்தம்பித்து விட்டேன். நூறு ரூபாய் என்றால் லேசா?

பாடம் ஆரம்பமாகியது. ஒரு பாடத்தை நான் பத்துத் தடவை சொல்லிக் கொடுத்தும் நீ தெரிந்து கொள்ளாமல் என்னை மேலும் மேலும் கேட்டது எனக்கு சிரமமாக இருந்தது. இருந்தாலும், நாளடைவில் அது எனக்குப் பழக்கமாகி விட்டது. கொஞ்ச நாள் தான் நான் உன்னிடம் வாத்தியார் வேலை பார்த்தேன். அதற்குப் பிறகு வீட்டு எஜமானன் நான் தான் என்ற நிலைமைக்கு வந்து விட்டேன்.

ஆரம்பத்தில் உன் போக்கே எனக்குப் புரியவில்லை. பிறகுதான் தெரிந்தது, நீ என்னை உன்னுடையவன் ஆக்கிக் கொள்ளமுயல்கிறாய் என்று. நானும் ஈடு கொடுத்தேன்.

நாளடைவில்? ஐம்பது ரூபாயைச் சேர்த்து ஓரிடத்தில் பார்த்தறியாத நான், ஆயிரக்கணக்கில் செலவழிக்கத் தொடங்கினேன். பணம் இருக்கும் போது, செலவழிப்பதற்கென்ன என்று நீ எனக்கு தைரியமும் அளித்து வந்தாய், நான் அனாவசியமாக ஒரு பைசா கூடசெலவுசெய்யவில்லை. அவ்வளவுபணமும் என் வீட்டுக்குத் தான் போயிற்று. என் மனைவிக்கு ஆபரணங்கள் செய்தேன். நான் முதலில் உன்னிடம் சொன்னதால் நீ நினைத்துக் கொண்டிருந்தாய் எனக்கு கல்யாணமாகவில்லையென்று. ஆனால் எனக்கு கல்யாணமாகி விட்டது. என் வயிற்றை கழுவிக் கொள்ளவே என்னிடம் போதிய பணமில்லாதபோது, அவளை எங்கே வைத்துக் கொண்டு சம்ரட்சணை செய்வது? அவள் தன் தகப்பன் வீட்டில் இருந்தாள்.

நான் எடுத்த பணம் அவ்வளவும் அவளிடம் தான் போயிற்று. உன் பணத்தை இன்னொருத்திக்கு தருகிறோமே என்ற எண்ணம் என் மனதில் ஏற்படவேயில்லை. அகப்பட்டதைச் சுருட்டுகிற நிலைமையில் இருந்தேன்.

பணம்! அதுதான் என் தேவை. அதில்லாமல் நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன். இப்போதோ அது அளவுக்கு மீறி கிடைத்தது.

உன் பணத்தை நான் தாராளமாய் செலவழிப்பதைப் பற்றி நீ கவலைப்படவேயில்லை. உனக்கு வேண்டியது என் அன்பு. அதை நான் உனக்குக் கொடுக்கவில்லை. பொய்யாக நடித்தேன். பணத்திற்காக என் தேவை பூர்த்தியானவுடன் உன்னை விட்டு எப்படிப் போவது என்று தயங்கிக் கொண்டிருந்தேன். என் மனது உன் அன்பின் வயப்பட்டிருந்தது—எனக்குத் தெரியாமலே.

மனதைத் தைரியப்படுத்திக் கொண்டேன். ஒரு நாள் நடுநிசி. நீ என் பக்கத்தில் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தாய். நான் வெளியேறினேன். "நான் போகிறேன்" என்று மட்டும் நான் எழுதிவைத்திருந்த துண்டுக் காகிதத்தை நீ பார்த்திருப்பாய். என்ன நினைத்தாயோ? ஆனால் நிச்சயமாக, "நன்றி கெட்டவன்" என்று நீ என்னை மிகவும் திட்டியிருப்பாய் என்பது எனக்கு தெரிந்த விஷயமே. அது தவிர்க்க முடியாதது. இந்தக் கடிதத்தை உன் ஆறுதலுக்காகவே எழுதுகிறேன். உன் அன்புக்கு என் நன்றி.

இப்படிக்கு,

ரகுநாதன்.

ஒருவன் பணத்திற்காகவும், மற்றவன் புகழுக்காகவும் அவளிடம் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய அபிலாஷை தீர்ந்துவிட்டது. அவர்கள் போய் விட்டார்கள். அவளுக்கு அவள் எதிர்பார்த்த அன்பு கிடைக்கவில்லை. சுக வாழ்க்கையை வெறுத்து விட்டு கிராமத்திற்கு வந்து விட்டாள். இது தான் அவள் சினிமா உலகை விட்டு வெளியேறியதற்குக் காரணம்.

புஷ்பா உள்ளிருந்து வந்தாள். கடிதம் படித்துக் கொண்டிருந்த நான் அவள் போனதைக் கவனிக்கவில்லை. அழுது, அழுது அவள் கண்கள் சிவந்திருந்தன. கடிதத்தின் ஞாபகம் வரும்போது அவர்கள் நடத்திய அந்த நாடகம் அவள் கண் முன் தோற்றமளிக்கும்போல் தெரிகிறது. பின் அவள் அழாமல் என்ன செய்வாள், அழுவதன் மூலம் தானே பெண்கள் ஆறுதல் அடைகிறார்கள்.

அவள் வந்தவுடனே நான் எழுந்தேன்.

"அதற்குள்ளாகவா புறப்பட்டு விட்டீர்கள். இருந்து, இரவு இங்கு சாப்பிட்டு விட்டுப் போங்கள்!" என்றாள்.

"பரவாயில்லை, இன்னொரு நாள் வருகிறேன்!" என்றேன்.

"எல்லாம் தெரிந்ததா?"

"தெரிந்து கொண்டேன்."

"ஒரு கோரிக்கை!"

"என்ன? கேளுங்கள்!"

"நீங்கள் தெரிந்து கொண்ட என் விஷயங்களை தயவு செய்து யாருக்கும் சொல்லவேண்டாம். உங்களோடே இருக்கட்டும்."

"ஆகட்டும்" என்று கூறிவிட்டு நான் வெளியே வந்தேன். என் மனதில் என்னென்னவோ எண்ணங்கள் தோன்றின.

மங்கையர்க்கரசி

விநியோகஸ்தர்கள்

சென்னை—எம். ஏ. எதிராஜுலு நாயுடு, 2-A, கெங்கு ரெட்டி தெரு, எழும்பூர், சென்னை.

வட, தென்னாற்காடு, செங்கற்பட்டு, சித்தூர்—குமரவேல் பிக்சர்ஸ், 19, மாடாக்ஸ் தெரு, சூளை, சென்னை.

திருச்சி—ஸ்டார் பிக்சர்ஸ், ஸ்டார் டாக்கீஸ் பில்டிங்ஸ், திருச்சி.

தஞ்சாவூர்—ராதாகிருஷ்ண பிக்சர்ஸ், திருச்சி. (சந்திரா பிக்சர்ஸ் வெளியீடு)

கோயமுத்தூர்—கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட், கோயமுத்தூர்.

மைசூர், தென் கன்னடம், குடகு—ஆர். வீ. பிக்சர்ஸ், 157, சுபேதார் சத்திரம் ரோடு, பங்களூர்-2.

இலங்கை—ஸிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் 114, ஹார்டன் பிளேஸ், கொழும்பு.

சேலம்—அசோகா பிக்சர்ஸ், குகை, சேலம்.

திருவாங்கூர்—சுவாமி பில்ம்ஸ், கோட்டயம்.

மலையாளம், கொச்சி—ஜியோ பிக்சர்ஸ், கோட்டயம்.

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை சமஸ்தானம்—விஸ்வநாதன் பிக்சர்ஸ், காரைக்குடி.

"என்னைப் பார்த்ததும் எல்லோரும் சிரிக்கிறார்கள். பார்க்காத போதும் சிரியுங்கள்" என்று கூறும்

கலைவாணர்

என். எஸ். கிருஷ்ணன் அவர்களின்

(வானொலிப் பேச்சு)

என் கடன் களிப்பூட்டுதலே

விலை 0—3—0

ஒரு பிரதிக்கு தபால் செலவு *0-1-0* சேர்த்து *0-4-0* ஸ்டாம்பு அனுப்பவும். வியாபாரிகளுக்கு கமிஷன் 25%. தபால் செலவு வேறு. முன் பணம் அனுப்ப வேண்டும்.

இன்ப நிலையம்

புத்தகம் வெளியிடுவோர்—விற்பனையாளர்

மயிலாப்பூர் — சென்னை-4.

இயசெய்தி

சந்திரலேகாவின் வெள்ளிவிழா

சென்ற மாதம் 29-ம் தேதி ஜெமினியின் ஹிந்தி **சந்திரலேகா**வின் வெள்ளி விழாக் கொண்டாட்டம் பம்பாய் ராயல் அபேரா ஹவுஸில் நடைபெற்றது. இந்த விழாவுக்கு, பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் எஸ். கே. பட்டீல் தலைமை வகித்தார். அவர் **சந்திரலேகா** எல்லா அம்சங்களிலும் ஒரு சிறந்த படம் என்பதைக் குறிப்பிட்டு' எஸ். எஸ். வாஸன் இனி தயாரிக்கும் படங்கள் சர்வ தேசங்களிலும் கொடி நாட்டும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்தார். சினிமாத் தொழிலின் சேவை மகத்தானது என்றும், அதை சர்க்கார் தகுந்தபடி பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். **சந்திரலேகா**வை வெற்றிகரமாகத் திரையிட்ட பல தியேட்டர்காரர்களுக்கு ஜெமினியின் சார்பில் எஸ். கே. பட்டீல் பரிசுகளை வழங்கினர். ஜெமினி விளம்பர அதிகாரி வி. கே. என். சாரி விழாவிற்கு விஜயம் செய்திருந்தார்.

பெண்

ஏவி. எம். அடுத்தபடி பெண் என்ற ரா. வெங்கடாசலத்தின் சமூக நாடகத்தைப் படமாகத் தயாரிப்பாரென்று தெரிகிறது.

புத்தர் படத்திற்குத் தடை

அமெரிக்காவில் தயாரிக்கப் பட்ட **லீரைட் ஆப் புத்தா** என்ற படத்திற்கு, இலங்கையிலுள்ள புத்த மதத்தினர்களின் பலமான ஆட்சேபம் இருப்பதால் அப்படம் தடை செய்யப் படக்கூடுமாம். இப்படம் சில புத்த பிக்ஷுகளுக்கு மட்டும் போட்டுக் காட்டப்பட்டது. இதில் ஆக்ஷேபகரமான அம்சங்கள் இருப்பதாக அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களாம்.

ஜூபிடரின் ஹிந்திப் படம்

ஜூபிடர் பிக்சர்ஸார் பிரமாதமான அளவிலே ஒரு ஹிந்திப் படத்தைத் தயாரிக்க முயற்சிகள் செய்து வருகிறார்களாம். ராம்நாத்-சேகர் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வார்களாம். கதை ஸி. என். அண்ணாத்துரையின் கலிங்க ராணியாக இருக்கும் போலிருக்கிறது.

சென்னையில் புதிய தியேட்டர்

சென்னை கெயிட்டி தியேட்டரின் பகர்வையில் புதிதாக ஒரு தியேட்டர் தோன்றியிருக்கிறது. இதன் பெயர் **சித்ரா டாக்கீஸ்.** இத் தியேட்டர் பல வருஷங்களுக்கு முன்பே கட்டப் பட்டு விட்டது. ஆனால் சில காரணங்களினால் இது வரை லைஸென்ஸ் அளிக்கப் படாமலிருந்தது. ஸ்ரீ. கே. விஸ்வநாதன் அரும்பாடு பட்டு லைஸென்ஸ் பெற்று இத் தியேட்டரின் திறப்பு விழாவை சுதந்திர தினத்தன்று நடத்தினர். இதற்கு விஜயம் செய்தவர்களுக்கு சந்தனம் தாம்பூலம் வழங்கப் பட்டது. பழைய தமிழ் **சீதா கல்யாணம்,** புதிய ஹிந்தி **ஆக்ட்ரஸ்,** ஆகிய படங்களிலிருந்து சில ரீல்கள் காட்டப் பட்டன. **ஆக்ட்ரஸ்** படத்துடன் இத்தியேட்டர் ஆரம்பமாகியிருக்கிறது. இத் தியேட்டர் அழகாகவும், நல்ல இட வசதியுடனும், புதிய இயந்திரங்களுடனும் அமைந்திருக்கிறது. இத்தியேட்டர் சீக்கிரமே ரஸிகர்களின் அபிமானதியேட்டராகிவிடுமென்று எதிர்பார்க்கிறோம்.

நக்ஷத்திர நிகழ்ச்சி

வண்ணாரப் பேட்டை சர். தியாகராய செட்டியார் உயர் நிலைப் பள்ளி



"சந்திரலேகா" படத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு பம்பாய் பத்திரிகாசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட விருந்தின்போது எடுத்த படம். வலது புறமிருந்து மூன்ருவது உள்ளவர் ஜெமினி விளம்பர நிர்வாகி வி. கே. என். சாரி. அவருக்குப் பின்னுலிருப்பவர் கிருஷ்ணுஜி.

பின் உதவி நிதிக்காக சென்ற மாதம் 22-ந் தேதி முதல் இம் மாதம் 2-ந் தேதி முடிய சினிமா நக்ஷத்திரங்களின் சங்கீத, நடனக் கச்சேரிகள் நடைபெற்றன. கச்சேரிக்காக பிரமாண்டமான பந்தலும், சகல வசதிகளும் செய்து வைத்திருந்தனர். சர்க்காரும் பொது ஜனங்களின் நன்மைக்காக பஸ்களைப் பல வழிகளாக் செல்ல ஏற்பாடு செய்திருந்தனர். நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தியவர் இசை அரசு எம். எம். தண்டபாணி தேசிகர் என்ப்து குறிப்பிடத் தக்கது. தியாகராஜ பாகவதர், ஹொன்னப்பா, ஜி. என். பி., மதுரை மணி, வஸந்தகோகிலம், வஸந்த குமாரி, தேசிகர், சுந்தராம்பாள், குமாரி கமலா, பிரேமாவதி, என். எஸ். கே. டி. கே. எஸ். சகோதரர்கள் ஆகியோரின் கச்சேரிகள், நடனம், காலக்ஷேபம், நாடகம் ஆகியவை நடைபெற்றன.

பக்ஷி ராஜாவின் முயற்சி

பக்ஷி ராஜா ஸ்டுடியோஸார் அடுத்தபடி, பிரபல பிரஞ்சு நாவலாசிரியர் விக்டர் ஹ்யூகோ எழுதிய **லே மிஸரபிள்** என்ற கதையைத் தழுவிப் படம் பிடிக்க திட்டம் போட்டிருக்கின்றனர். இந்த நாவலை **ஏழை படும் பாடு** என்று தமிழில் மொழி பெயர்த்துள்ள சுத்தானந்த பாரதியார், இப் படத்திற்கான வசனங்களை எழுதுவாராம். இது ராம்னுத் சேகர் தயாரிப்பாக இருக்கு மென்றும், இதில் நாகையா பிரதம பாகத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

படத்திற்குத் தடை

1942-ம் வருஷ ஆகஸ்ட் புரட்சியைச் சித்திரிக்கும் "42" என்ற வங்காளிப் படத்திற்கு மேற்கு வங்காளத்தில் தடை விதிக்கப் பட்டிருக்கிறது.

சினிமா டைரி

ஜூன், 1949

தேதி

1. சினிமா ரஸிகர்கள் சங்கக் கூட்டமொன்று நடைபெற்றது.
2. கோவையில் ஜூபிடரின் 'வேலைக்காரி' யின் நூறாவது நாள் கொண்டாட்டம் நடைபெற்றது.
சர்க்காரின் 'அங்கீகரிக்கப்பட்ட செய்திப் படங்களை' தியேட்டர்கள் திரையிட ஆரம்பித்தன.
9. 'சினிமாக் காட்சி வரியைக் கண்டிக்க' நகர தியேட்டர்காரர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது.
தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.
15. டாக்டர் ஆர். கிருஷ்ண ராவ் தலைமையில் டி. கே. எஸ். பிரதர்ஸின் 'மனிதன்' நாடகம் சென்னையில் ஆரம்பம்.
18. சூர்யா பிலிம்ஸ் 'ஸ்ரீ ஆண்டாள்' சென்னை பிராட்வே, ஸன் ஆகிய இரு தியேட்டர்களிலும் திரையிடப் பட்டது.
22. 'அங்கீகரிக்கப்பட்ட படங்கள்' சம்பந்தமான ஒரு மகஜரை தென்னிந்திய பிலிம் சேம்பர் பிரதம மந்திரிக்கு அனுப்பியது.
26. 'வேலைக்காரி'யின் நூறாவது நாள் விழா சென்னை பாரகனில் நடைபெற்றது.

ஜூலை, 1949.

134118

1. சக்தி நாடக சபாவின் 'தோழன்' நாடகத்திற்கு எம். கே. தியாகராஜ பாகவதர் தலைமை வகித்தார்.
புதுப்பிக்கப் பட்ட கெயிட்டி தியேட்டரை மந்திரி கனம் பக்தவத்ஸலம் திறந்து வைத்தார்.
சென்னை கெயிட்டியிலும், மஹாராணியிலும் 'கீத காந்தி' படம் திரையிடப் பெற்றது.
'தேவனின்' துப்பறியும் சாம்பு நாடகம் ரஸிக ரஞ்சனி ஸபாவில் நடிக்கப் பட்டது.
சென்னை பிரபாத், சரஸ்வதி ஆகிய இரு தியெட்டர்களில் 'நம் நாடு' தமிழ்ப்படம் திரையிடப் பட்டது.
10. ஸினி டெக்னிஷ்யன்கள் சங்க அங்கத்தினர்களுக்காக 'வேலைக்காரி' படம் சித்ரா டாக்கீஸில் காட்டப்பட்டது.
14. ஆண்டிப்பட்டி ராமலிங்கம் டாக்கீஸில் தீ விபத்து ஏற்பட்டது.
15. பிரபாத் டாக்கீஸின் ஒன்பதாவது ஆண்டு விழா நடைபெற்றது.
டைரெக்டர் சாந்தாராமும் நடிகை ஜெய ஸ்ரீயும் சென்னைக்கு வந்தனர்.
தமிழாக்கப்பட்ட 'மாயக் குதிரை' கோவையில் திரையிடப்பட்டது.
16. சினிமா ரஸிகர்கள் கூட்டம் ஒன்று சித்ரா டாக்கீஸில் நடைபெற்றது.
19. சர்க்காரின் பிலிம் டிவிஷன் தயாரித்த சில டாக்குமெண்டரி படங்களை சித்ரா டாக்கீஸில் சில பத்திரிகாசிரியர்கள் பார்த்தனர்.
22. 'திருமழிசை ஆழவார்' சென்னை பாரகனிலும், லக்ஷ்மியிலும் திரையிடப் பட்டது.
சென்னை பிராட்வேயில் 'கோகுல தாஸி' திரையிடப் பட்டது.
28. ஹிந்தி 'சந்திர லேகா' வின் வெள்ளி விழா பம்பாயில் கொண்டாடப் பட்டது.
சினிமா டெக்னிஷ்யன்கள் சங்க அங்கத்தினர்களுக்காக 'வாலிபத்தின் திரு விழா' என்ற ருஷ்யக் கலர்ப் படம்—சித்ரா டாக்கீஸில் காட்டப்பட



முதல் இதழ்
அக்டோபர் 1உ
வெளிவருகிறது

வாடாமலர்

உயர்தர ஹாஸ்ய
மாதப் பத்திரிகை!

ஆசிரியர்: நாடோடி

விலை 6 அணா

விவரங்களுக்கு
வாடாமலர்
மாம்பலம் · சென்னை 17

எல்லா ஊர்களிலும் விற்பனை ஏஜண்டுகள் தேவை

Printed by P. Arunachalam at Commercial Printing & Publishing House, 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. Gopal (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone 4316.

மாகாண முழுவதும் செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் வெளிவருகிறது